

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2025,
விலை ரூ.20/-

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:07, Pages:56
FEBRUARY-2025, Price Rs.20/-

## திருப்பதி
## ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
## 19-02-2025 முதல் 28-02-2025 வரை



05-12-2024 அன்று திருமலையில் கோகர்ப அணையில் நடை பெற்ற சிறப்பு பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள் உடன் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் மற்றும் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர்



09-12-2024 அன்று சிரவணம் செயல் திட்ட மையத்தை பார்வையிட்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.பி.ஆர்.நாயுடு அவர்கள் உடன் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு.பி.பானு பிரகாஷ் ரெட்டி அவர்கள், தி.தி.தே இணைச்செயலாட்சித் தலைவர் திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். அவர்கள்



11-12-2024 அன்று திருவரங்கம் ரங்கநாதப் பெருமானுக்கு தி.தி.தே சார்பில் பட்டு வஸ்திரம் சமர்ப்பிக்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



22-12-2024 அன்று திருமலையில் கருடாத்ரி நகர் குடில் அருகில் துணை விசாரனை அலுவலகத்தைத் துவக்கி வைத்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு.ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.சி.எச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள், இணைச் செயலாட்சித்தலைவர் திருமதி எம்.கௌதமி ஐ.ஏ.எஸ். அவர்கள்



11-12-2024 அன்று திருமலையில் தரிகொண்ட வெங்கமாம்பா அன்னதானக் கூடத்தில் கியோசிக் இயந்திரத்தைத் துவக்கி வைத்த கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சி.எச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



17-12-2024 அன்று திருச்சானூரில் அமைந்துள்ள அன்னதானக் கூடத்தில் கியோசிக் இயந்திரத்தைத் துவக்கி வைத்த திருப்பதி இணைச் செயலாட்சித்தலைவர் திரு.வி.வீரபிம்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்

வேத$_{3}$ா விநாசிநம் நித்யம்
ய ஏநமஜமவ்யயம்|



கத$_{2}$ம் ஸ புருஷ: பார்த$_{2}$
கம் க$_{4}$ாதயதி ஹந்தி கம்||

அர்ஜுனா! எந்த மனிதன் இந்த ஆன்மாவை அழிவற்றவன்; நித்தியமானவன்; பிறப்பற்றவன்; மாறுதலற்றவன் என்று அறிகிறானோ, அவன் எவ்வாறு யாரைக் கொல்லச் செய்கிறான்? எப்படி யாரைக் கொல்கிறான்?

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–21*

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன், ஆறு விரிந்தான் ஏழ் உம்பர்ச்
சென்றனன்தான் இருந்தான் உணர்ந்து எட்டே

இறைவன் ஒருவனே. அவன் அம்மையாகவும் அப்பனாகவும் இரண்டாகக் காட்டினான். அவன், அவள், அது (குரு, லிங்கம், சங்கமம்) என்ற மூன்று நிலையில் நிற்கின்றான். சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்கிற நான்கையும் உணர்த்தினான்.



ஐந்து பூதங்கள் வடிவில் ஐந்தானான். பதம், எழுத்து, மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்று ஆறாக விரிந்தான். ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி என்ற ஏழு கிரகங்களுக்கும் அப்பாற்பட்டு நிற்கிறான். நிலம், நீர். நெருப்பு, விசும்பு, சந்திரன், சூரியன் எஜமானர் என்கிற எண் வகையாக பரந்திருக்கிறான்.

*–திருமந்திரம்*



# ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை

## (ஒரு நாள் நன்கொடை திட்டம்)

அன்னம் பரப்ரஹ்ம ஸ்வரூபம் – உணவு தெய்வ வடிவம். எல்லா தானங்களில் சிறந்தது அன்ன தானம். இதை நன்கு அறிந்த தி.தி.தே. திருமலை, திருப்பதி, திருச்சானூர் போன்ற இடங்களில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கி வருகிறது. அன்னதானத்திற்கு ஒரு நாள் நன்கொடை திட்டம் குறித்து அனைவரும் அறிந்ததே. “ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கு” ஒரு நாளுக்கு ரூ. 44 இலட்சம் செலவு ஆகிறது. அச்செலவானது கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்தப்படுள்ளது.

1) காலை சிற்றுண்டி - ரூ.10 இலட்சம்
2) மதிய உணவு - ரூ.17 இலட்சம்
3) இரவு உணவு - ரூ.17 இலட்சம்
4) ஒரு நாள் முழுதும் - ரூ.44 இலட்சம்

மின்னஞ்சல் :
cdmc.ttd@tirumala.org;
dyeodonarcell@tirumala.org

0877-2263001
24/7
0877-2263472
(அலுவலக நேரம்)

மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு நன்கொடை வழங்கும் நன்கொடையாளர்களுக்கு கீழ்க்காணும் வசதிகள் வழங்கப்படும்.
(நன்கொடையாளர் : தனிப்பட்ட நபர்/நிறுவனங்கள்/நிறுமங்கள்/அறக்கட்டளைகள்)

1. ரூ.25.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கும் அளிக்கப்படும்.
2. ரூ.10.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு உணவு ஆகியவற்றிற்கு தனித்து நன்கொடை அளிப்பவர்களுக்கு அளிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றோடு கீழ்க்காணும் முன்னுரிமை அளிக்கப்படும்.

அ) நன்கொடையாளர் பெயர் திருமலையிலுள்ள அன்ன தானக்கூடத்தில்(எம்.டி.வி.ஏ.சி.) காட்சி ஆக்கப்படும்.

ஆ) நன்கொடையாளர் விரும்பும் ஏதாவது ஒரு நாள் மட்டும் அன்னதானக்கூடத்தில் (எம்.டி.வி.ஏ.சி., திருமலை) உணவு பரிமாறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**மேலும் தகவல்களுக்கு :**
துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் மையம்),
ஆதிசேஷு ரெஸ்ட் ஹவுஸ்,
தி.தி.தே., திருமலை.





இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நன்கொடைகள் அனைத்தும் இதர நன்கொடைகளைப்போன்று கார்பஸ் நன்கொடையாகவே கருதப்படும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2025

மலர் 04
இதழ் 07



## உள்ளுறை

பக்கம்


இரத சப்தமி - திரு ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. 7

முதுமைக்கு முன் திருமலை வாருங்கள் 10
-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.

உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் 14
- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.

மஹாசிவராத்திரியும் சிவாலய ஓட்டமும் 16
- முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை.

சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: அதிகார நந்தி
-படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. 18

பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் - திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. 20

ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 24

பார்வதி பரமேஸ்வரன் பரிணயம் 31
- திருமதி எஸ். வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.

திருவேங்கடவன் திருவருள் - திருமதி எம்.ஜி.மாலினி, சேலம். 34

108 திவ்வியதேச வைபவம் : திருஎவ்வுளூர் 35
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் 39
உரையும் : இராமாநுஜர்
- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: ஜடாயு 44
- திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.

ஆயுர் வேதம்: சைவ உணவுகள் -திருமதி வி.உஷா, திருப்பதி. 46

ராசிபலன்கள் : பிப்ரவரி 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். 47

நீதிக்கதை: கடவுளாக இருங்கள் -திரு.இரா. அருண்குமார், புதுச்சேரி. 48

சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49

சித்திரக்கதை : பக்தியால் எதுவும் சாத்தியமே 52



சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எப்பிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்.
-பிரதான ஆசிரியர்


அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீகாமாக்ஷி உடனுறை கபிலேஸ்வர ஸ்வாமி, திருப்பதி.

பின்னட்டை : ஸ்ரீசரஸ்வதி தேவி (சித்திரம்)



உங்களுடன்

# கண் திறந்து பார்... உண்மைப் புலப்படும்

மகாத்மாக்களின் அவதாரங்கள் யாவும் சகல உயிர்களின் நலனிற்காகவே தோன்றின. காலத்தின் விளைவால் ஒவ்வொரு பலனைப் பெறுவதற்காக சர்வேஸ்வரன் பல அவதாரங்களை மேற்கொண்டார் என நமக்குப் புராணங்கள் எடுத்தியம்புகின்றன. ஒவ்வொரு முறையும் சர்வேஸ்வரன் அவதாரம் மேற்கொள்ளும் போதும் மானிட உலகிற்கு விலைமதிப்பற்ற உபதேசங்கள் கிடைக்கின்றன. அதுதான் படைப்பின் விசித்திரமுமாகும். ஆதலால்தான் மானிடர்களுக்கு இடையே கருத்துவேற்றுமைகள் பல இருந்தாலும் எண்ணற்ற இப்படைப்பில் வெவ்வேறு வடிவங்களைத் தாங்கிடும் அப்பரம்பொருளானவர் தாம் ஒன்றே என்பதை உணர்த்திடவே *“ருத்ராணாம் சங்கரச்சாஸ்மி”* என்று ஸ்ரீமத்பகவத்கீதையில் கூறுகின்றார்.

“ஏகாதச வடிவங்களான ருத்ர வடிவங்களில் நான் சங்கரன்” என்று அப்பொருள் கூறுவதில் இருந்து ஒரு தத்துவ பேதம் உள்ளது. ஆனால், உலகளாவிய சமுதாயத்திற்கு ஒரு விலைமதிப்பற்ற செய்தியும் அதில் மறைந்துள்ளதை நாம் அறியலாம்.

சங்கரன் அழித்தல் மூர்த்தியாவார். ஆனாலும் அந்த தத்துவத்தை ஒரு மகா உன்னதமான தெய்வீக நடைமுறையில் பயன்படுத்தியதால் சங்கரனானார். அவர் நீலகண்டன். ஆலகால விஷத்தைக் கூட தன் கண்டத்தில் (தொண்டையில்) நிறுத்தி சர்வலோகத்தையும் காத்திட்டார். இந்த நீலகண்ட அவதாரத் தத்துவம் அல்லது குணத்தின் வாயிலாக மானிடர்கள் ஒரு உண்மையை அறிய முடிகிறது. கால ஓட்டத்தில் எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்டாலும் அதிலிருந்து நாம் மீள வேண்டும். அதாவது உலகத்தையே அழிக்கவல்ல ஆலகால விஷத்தினை சிவபெருமான் உட்கொண்டாலும் அக்கொடிய விஷத்தை வயிற்றுக்குள் செல்லாமல் தொண்டையிலேயே தடுத்து நிறுத்தி தேகத்தினைக் காத்தார்.

அதுபோன்றுதான் நம் சமுதாயத்திலும் நம்மைச் சூழ்ந்து பல இன்னல்கள் ஏற்பட்டாலும் அதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அதை விடுத்து அந்த இன்னலைப் பெரிதாக்கி அதிலிருந்து மீள முடியாமல் துன்பத்திலேயே துவண்டு இருத்தல் கூடாது. மானிடர்கள் எவ்வளவு இன்னல்களில் சிக்குண்டாலும் கூட புத்தியைப் பயன்படுத்தி அதிலிருந்து வெளியே வருதல் வேண்டும் எனும் ஒரு நற்செய்தியை அப்பரமேஸ்வரன் நமக்கு நீலகண்டனாகி எடுத்தியம்புகிறார்.

சமுதாயத்தில் மானிடர்களிடையே அலட்சியம், கடுமை, மனக்கலக்கம் யாவும் வெளிப்படுகின்றன. இவை யாவற்றிலிருந்தும் நம் புத்தியைப் பயன்படுத்தி வெளியே வர வேண்டும். இதனைத்தான் எம்பெருமானான ஸ்ரீகிருஷ்ண பகவான், பகவத் கீதையில் கர்ம யோகத்தில் மனக்கலக்கமுற்றிருந்த அர்ஜுனனுக்கு போதிக்கின்றார்.

மேற்கூறியபடி மனிதன் மனக்கலக்கத்திற்கும், தீய வழிகளுக்கும் ஆட்படும் பொழுது உடனே அதிலிருந்து விடுபடுதல் வேண்டும். அவ்வாறு அதிலிருந்து மீள முயற்சித்து விடுபட்டாலே அவன் ஒருபடி முன்னேறியது போன்றாகும். அதேபோன்று தன் நலனுக்காக மட்டுமின்றி, பிறர் நலனுக்காகவும் தன்னிடமுள்ளவற்றில் சிறிதேனும் பிறருக்கு அளித்து உதவிட வேண்டும் எனும் சமூக எண்ணம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதும் அதில் புலப்படும்.

அப்பரமேஸ்வரன் முக்கண்ணன். மலை முதல் அணு வரை பரந்து விரிந்து கிடக்கும் விஷ்வரூபம் கொண்ட சத்யஸ்வரூபனான அவனை யார் ஒருவர் தரிசித்திட வேண்டுமென்றாலும் ஆசைகளை எரித்திடும் ஞானக் கண்களைத் திறந்து, மனதினை ஒருநிலைப்படுத்துதல் வேண்டும்.

தர்மத்தின் வழியிலோ, உலக வாழ்க்கையிலோ அல்லது ஆன்மீகப் பாதையிலோ ஒரு பெண் சக்தியின் வழிகாட்டுதல் இல்லையெனில் ஒரு ஆடவன் முழுமையற்றவன் ஆவான் என்பதை அப்பரமேஸ்வரனின் அர்த்தநாரீஸ்வர வடிவம் எடுத்தியம்புகிறது. சக்தியின் வடிவமான பெண்மைக்கு முன்னுரிமை அளித்தால் மட்டுமே எதிலும் சாதிக்க முடியும் என்பது இந்த அர்த்தநாரீஸ்வரர் வடிவம் நமக்கு எடுத்துரைக்கின்றது.

இவ்விதமாக ஒவ்வொரு வடிவமும் நம்முடைய நல்வாழ்விற்கும் நலனிற்கும் என்று ஏற்பட்ட புராண தேவதைகளின் வடிவங்களாகும். உண்மைத் தேடலின் கண்ணோட்டத்தில் தேடினால் அழியாமையின் வடிவங்கள் கண்டிப்பாகத் தெரியும்.

# இரத சப்தமி



திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி,
94438 79592

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் அண்ட சராசரங்களை எல்லாம் படைத்துக் காத்து அருளும் பரம தயாள குணம் கொண்டவன். கோள்கள், விண்மீன்கள் மற்றும் கோடிக் கணக்கில் விண்மீன் திறள்களைப் படைத்து இயங்கச் செய்பவன். பகவத் கீதை விஸ்வரூப தரிசன யோகத்தில்,

*அநாதி மத்யாந்த மனந்த வீர்ய*
*மனந்த பாஹூம் சசி சூர்ய நேத்ரம்*

என்று சூரிய சந்திரனை எம்பெருமானின் திருக்கண் களாக அர்ஜுனன் சேவித்து பிரமித்து நிற்கிறான்.

**சூரிய இயக்கம்:**

நவீன விஞ்ஞானத்தின்படி சூரியன் பூமிக்கு அருகே உள்ள விண்மீனாகும். சந்திரனோடு கூடிய பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகிறது. சராசரியாக 365 நாட்களில் பூமி சூரியனை ஒரு முழு சுற்று சுற்றி முடிக்கிறது. நீள்வட்டப் பாதைக்கு இரு மையங்கள் உள்ளது. பூமி நீள்வட்டப் பாதையில் இயங்கும்போது சூரியன் இரு மையங்களுக்கு இடையே (வடகிழக்கு மையம், தென்கிழக்கு மையம்) இடம் வலமாக நகரும். சூரியன் வடகிழக்கிலிருந்து தென்கிழக்காக நகர்ந்து பின் தென்கிழக்கிலிருந்து வடகிழக்கு நோக்கி திரும்பி பயணத்தினை மேற்கொண்டு பூமியின் மீது வருடம் முழுவதும் வெப்பக்கதிர்களைப் பாய்ச்சும்.

ஒரு வருடத்தின் பனிரெண்டு மாதங்கள் வசந்த காலம், கோடைகாலம், கார்காலம், கூதிர்காலம், முன் பனிக் காலம், பின் பனிக்காலம் என ஆறு பருவங்களாக முன்னோர்களால் வகுக்கப்பட்டுள்ளது. பூமியும் சூரியனின் நிலைக்குத் தகுந்தவாறு வெப்பத்தினை ஏற்று மழையினைப் பெய்வித்து தாவரங்களை விளையச் செய்து, மனிதன் உட்பட விலங்குகளுக்கு உணவினை உற்பத்தி செய்கின்றது.

**இரத சப்தமி**

காஷ்யப முனிவரின் பத்தினியான அதிதி தேவிக்கு புத்திரனாக சூரியன் அவதாரம் செய்த நாள் இரத சப்தமி நன்னாளாகும். சூரியன் ஒரு சக்கரம் கொண்ட தங்கத்தேரினில் பச்சை நிற ஏழு குதிரைகள் இழுக்க வானவெளியில் பயணம் மேற்கொள்கிறார். 7 குதிரைகள் வாரத்தின் 7 நாட்களையும், வான வில்லின் ஏழு வண்ணங்களையும் குறிக்கி றது. சூரியன் 12 ராசிகளில் பிரவேசிக்கும் நேரத்தில் மாதப் பிறப்பு நிகழ்கிறது.

சூரியன் ஒருவரே என்றாலும் பனிரெண்டு மாதங்களுக்கு பனிரெண்டு ஆதித்யர்கள் என நாமகரணம் பெறு கிறார். சித்திரையில் அம்சு, வைகாசியில் தாதா, ஆனியில் இந்திரன், ஆடியில் அரியமா, ஆவணியில் விவசுவான், புரட்டாசியில் பகன், ஐப்பசியில் பர்ஜந்நி யன், கார்த்திகையில் துவஷ்டா, மார்கழி யில் மித்திரன், தையில் விஷ்ணு, மாசியில் வருணன், பங்குனியில் பூஷா என ஆதித்ய நாமகரணம் சூரியனுக்குச் சூட்டப்பட்டுள்ளது. பகவத் கீதை விபூதி



யோகத்தில் *''ஆதித்யாணாமஹம், விஷ்ணுர்ஜ்யோதிஷாம் ரவிரம்சு மான்''* ஆதித்யர்களுள் நான் விஷ்ணு, ஒளிர்பவைகளுள் கதிர்கள் நிறைந்த ஞாயிறு என பகவான் அருளுகிறார். தை மாதத்தில் உத்திராயண காலத்தினை தோற்றுவித்து பனியைக் குறைத்து வெப்பத்தினை அளவுபட வளர்க்கும் சூரியனுக்கு விஷ்ணு எனும் ஆதித்ய நாமம் சூட்டப்படுகிறது.

தை அமாவாசைக்கு ஏழாம் நாளான சப்தமி திதியில் சூரிய பகவானின் ஏழு குதிரைகளும் இரதத்தினை தென் கிழக்கில் இருந்து வடகிழக்கு திசையினை நோக்கி திருப்புகின்றன. இந்த நாளில் சூரியன் அபரிமிதமான ஆற்றலினை பூமியின் மீது பாய்ச்சுவதால் இரத சப்தமி மிகவும் புண்ணியம் நிறைந்த நன்னாளாக முன்னோர்களால் கொண்டாடப்படுகிறது.

**பீஷ்மர்**

பிதாமகர் பீஷ்மர் தாம் விரும்புகின்ற நேரத்தில் உடலில் இருந்து உயிரினைப் பிரிந்துவிடும் சக்தியும் யோகமும் வாய்க்கப் பெற்றவர். எனினும் அம்புப் படுக்கையில் இருந்து தம்முடைய உயிரினை விட முடியாமல் உடல் அவஸ்தையினைப் பெற்றுக் கொண்டிருந்தார். வியாசர் அவரின் அருகில் வந்து இதற்கான காரணத்தினை விவரிக்கிறார்.

மனம், வாக்கு, உடலினால் பாவங்கள் செய்யாதவர் மோட்சம் அடைவது திண்ணம் என்றாலும் கண்ணெதிரே அநீதி நிகழும்போது கண்டும் காணாமல் தடுக்காமல் இருப்பதும் பாவத்திற்குச் சமமாகும். பாண்டவப் பத்தினியான திரௌபதி துரியோதனன் சபையில் துச்சாதனன் துகிலினை உரிக்கையில் சான்றோர்கள் அனைவரிடமும் தமக்கு நீதியும், நியாமும் வழங்கக் கதறியபோது கேட்கும் திறனிருந்த உம்முடைய செவிகள் அவளின் குரலைக் கேட்கவில்லை. பார்க்கும் திறனிருந்த உம்முடைய கண்கள் பாராமல் தவிர்த்தது, கோபமுடன் வாளினை எடுக்காத உம்முடைய கைகள் துவண்டு இருந்தது, வீறு கொண்டு எழுந்திராத பலம் பொருந்திய உம்முடைய கால்கள் மற்றும் தோள்கள் அசைவற்றுக் கிடந்தன, நீதி தவறாத உம்முடைய மூளை செயலற்று இருந்தது என அனைத்து உடல் பாகங்களும், திரௌபதியின்பால் பட்ட பாவத்தினால் உயிரினை விட மறுக்கின்றன என வியாசர் கூறினார். இத்தகைய பாவங்களினால் துன்பப்படும் இந்த உடலின் பாகங்களைப் பொசுக்கும் சக்தி சூரியனுக்கே உண்டு என்கிறார்.

வியாசர் பீஷ்மரின் உடலை எருக்கன் இலைகளால் மூடி அலங்கரித்தார். சூரியனின் சக்தி முழுவதையும் கிரகிக்கும் வல்லமை பெற்ற எருக்கன் இலைகளின் ஆற்றலினால் பீஷ்மரின் அங்கங்கள் புனிதம் அடைந்து, அவரும் மோட்சம் பெற்றார்.

**இரத சப்தமி விரதம்**

இரத சப்தமியன்று சூரியன் உதயமாகும் நேரத்தில் எழுந்து ஆறு, குளத்திற்குச் செல்ல வேண்டும். இயலாதவர்கள் வீட்டில் கிழக்கு நோக்கி நின்று, ஏழு எருக்கன் இலைகளில் அட்சதை வைத்து கால்களில் இரண்டு, கைகளில் இரண்டு, தோள்களில் இரண்டு, தலையில் ஒன்று என வைத்து – *''ஓம் சூர்ய தேவாய நம:''* எனும் மந்திரத்தினை ஜபம் செய்து கொண்டு தலை முழுகி நீராட வேண்டும்.

வீட்டு வாசலில் சூரியஒளி விழும் இடத்தில் நீர் தெளித்து மெழுகி தேர் கோலத்தினை இட்டு ஒரேயொரு வடமாக தெருவரை வரைந்து அரிசி, பருப்பு, வெல்லம் இவற்றை சூரியனுக்குப் படையல் இட வேண்டும். பூஜையறையில் செம்மண்ணால் மெழுகி சூரிய இரதம் வரைந்து சந்தனம், மஞ்சள், குங்குமம் இட்டு நிவேதனம் செய்ய வேண்டும். கோதுமையால் செய்த சப்பாத்தி சாதத்தினை பசு மாட்டிற்கு அளிக்க வேண்டும்.

**விரத பலன்**

இரத சப்தமியன்று சூரியனுக்கு எருக்கன் இலைகளினால் நீராடுவதால் அனைத்து பாவங்களும் நீங்கி புனித நிலையினை அடைவர். இவ்விரதம் இருப்பவரின் பித்ருக்கள் மோட்சம் அடைகின்றனர். பெண்கள் இந்த ஜென்மத்திலும், அடுத்த ஜென்மங்களிலும் தீர்க்க சுமங்கலியாக இருப்பர். ஆண்கள் பெரும் செல்வந்தர் ஆவதற்கும், யோக சாஸ்திரம் பயில துவங்குவதற்கும் இரத சப்தமி நன்னாளில் விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

**திருமலையில் இரத சப்தமி**


சூரிய பகவான் ஸ்ரீமந்நாராயணனின் அம்சம் என்பதாலும், ஸ்ரீராமனின் குலதெய்வம் என்பதாலும் பெருமாள் ஆலயங்களில் இரத சப்தமி தினத்தன்று எம்பெருமான் சூரியப் பிரபையில் புறப்பாடு கண்டருளி பாகவதோத்தமர்களுக்கு அருளுகிறார். சூரிய இரதத்திற்கு ஏழு குதிரைகள் போன்று ஏழு மலைகள் மேல் திருவேங்கடமுடையான் வீற்றிருப்பதால் இரத சப்தமி தினத்தன்று திருமலையப்ப ஸ்வாமி அதிகாலை தொடங்கி ஏழு வாகனங்களில் திருவீதி புறப்பாடு கண்டருளி பாகவதர்களுக்கு பேரின்பம் அருளுகிறார்.

அதிகாலை சூரிய உதயத்தின் போது சூரியப் பிரபை வாகனத்தில் ஸ்வாமியின் புறப்பாடு ஆரம்பம் ஆகிறது. பிறகு சின்ன சேஷ வாகனம், கருட வாகனம், ஹனுமத் வாகனம் என திருமலையப்ப ஸ்வாமி திருமாடவீதி புறப்பாடு கண்டருளுகிறார். மதியம் இரண்டு மணியளவில் திருவேங்கடமுடையான் ஸ்வாமி புஷ்கரணியில் சக்கர ஸ்நானம் கண்டருளுகிறார். பிறகு சர்வ பூபால வாகனம், கல்ப விருக்ஷ வாகனத்தில் சேவை சாதித்து இரவு சந்திரப் பிரபை வாகனத்தில் எழுந்தருள்வார். இவ்வாறாக இரத சப்தமி ஒரு நாள் பிரம்மோத்ஸவமாக பூர்த்தியாகிறது. இந்த "ஒருநாள் பிரம்மோத்ஸவம்" திருமலையில் மட்டுமே நடைபெறுவது சிறப்பாகும்.

ஸ்ரீராமபிரானின் குலதனமாக பிரணாவாகர விமானத்தில் சயனக்கோலத்தில் ஆதிசேஷனின் படுக்கையிலே தெற்கு திசை நோக்கி சேவை சாதிக்கும் திருவரங்கநாதனின் ஏழுப் பிரகாரங்களைக் கொண்ட திருவரங்கத் திருத்தலத்திலும் நம்பெருமாள் புறப்பாட்டோடு இரத சப்தமி கொண்டாடப்படுகிறது. நவ கிரஹ தலமான சூரியனார் கோயிலில் இரதசப்தமியில் சிறப்பு திருமஞ்சன அலங்கார தீபாராதனையுடன் பூஜைகள் நடைபெறும்.

*"ஓம் நமோ ஆதித்யாய ஆயுள் ஆரோக்யம் புத்திர் பலம் தேஹிமே சதா"*






# முதுமைக்கு முன் திருமலை வாருங்கள்

– பேராசிரியர்
எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி,
94434 39963

நம்மாழ்வார் திருமலையப்பனிடம் அதிக ஈடுபாடு கொண்டவர். ***''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்''*** என்று மனம் பாரித்தவர். தமது தீர்க்க சரணாகதியைத் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டுதான் செய்கின்றார்.

***''புகல் ஒன்றும் இல்லா அடியேன் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே''*** என்று திருமலை அப்பனிடத்தில் ஆழங்கால் பட்டு சரணம் செய்கின்றார். இப்பாசுரவரி துவய மந்திரத்தின் விரிவான திருவாய்மொழியின் உயிரான வரி என்று உரையாசிரியர்கள் சொல்வார்கள்.

ஆழ்வார் மூன்றாம் பத்து, இரண்டாம் திருவாய் மொழியில் பகவானைப் பிரிந்து தம்மால் தரித்திருக்க முடியாத துடிப்புடன் ***''என் பரஞ் சுடரே, கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக் கூவுவனே''*** என்று துடிக்கிறார். எப்படியாவது இறைவனைக் காண வேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய உயிர் தரிக்காது என்று பாடும் துடிப்பு நம்மை பரவசப்படுத்தும்.

அவருடைய கலக்கத்தைக் கண்ட பகவான் "ஆழ்வீர், நம்மோடு கலந்து பரிமாறுவதற்கு இப்பிறப்பும் வாழ்வும் தடை இல்லை. உம்மை அடிமை கொள்வதற்காகவன்றோ குளிர்ந்த மலை மேல் திருவேங்கட மலையில் நாம் நின்று கொண்டிருக்கின்றோம். அதற்காகத்தானே இந்தத் திருவேங்கட மலை மீது இத்தனைக் காலமாய் நாம் எழுந்தருளி உள்ளோம்.

திருமலைக்கு வந்து நீர் விரும்பிய கைங்கரியத்தைச் செய்யலாம்" என்று சொல்லி, திருவேங்கடமுடையான் தம்முடைய நிலையைக் காட்ட, அந்தத் திருவேங்கடமுடையானின் திருவடிகளில் எல்லா காலத்திலும், எல்லா நிலைகளிலும், கைங்கரியம் செய்ய வேண்டும் என்று ஆழ்வார் கருதி ***''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்''*** என்று தொடங்கி ஒரு பதிகம் பாடுகின்றார்.

அதில் ஒரு அற்புதமான பாசுரம் தான் கீழே உள்ள பாசுரம்

***வைத்த நாள்வரை எல்லை குறுகிச்சென்று***
***எய்த்தி ளைப்பதன் முன்னம் அடைமினோ***
***பைத்த பாம்பணையான் திருவேங்கடம்***
***மொய்த்த சோலைமொய் பூந்தடம் தாழ்வரே***

இனி பதவுரையைப் பார்ப்போம்.

வைத்த – (பாகவதர்களே) உங்களுக்குச் சங்கல்பித்து வைத்த, நாள் – ஆயுட் காலத்தி னுடைய வரை அளவான, எல்லை – எல்லையா னது. குறுகி – அணுகி, எய்த்து இளைப்பதும், முன்னம் – (அதனால் நீங்கள்) மிகவும் தளர்ச்சி

அடைவதற்கு முன்னே; சென்று – திருமலையை நோக்கிச் சென்று, பைத்த பாம்பணையான் – படமெடுத்த ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்ட பெருமானது; திருவேங்கடம் – (அத்) திருமலையில், மொய்த்த சோலை – நெருங்கின சோலைகளும், மொய் பூ தடம் – நெருங்கின புஷ்கரணியுள், தாழ்வர் – திருத்தாழ்வரையை, அடைமின் – அடையுங்கள்.

இப்பாசுரத்தில் பகவான் ஆழ்வாருக்கு உறுதி அளித்தது போலவே கைங்கரியத்தைத் தந்தான். தீவினைகளை மாற்றி வைத்தான். மூப்பு, பிறப்பு, இறப்பு, பிணி அனைத்தையும் நீக்கினான் என்று தன்னுடைய அனுபவத்தைப் பாடிய ஆழ்வார், மற்றவர்களையும் பார்த்து, "ஏன் வீணாகக் காலம் கழிக்கின்றீர்கள்? உங்களுக்கு முதுமைக்கும், மறுமைக்கும் அற்புதமான மருந்து இங்கே இருக்கின்றதே. இதை நீங்கள் இப்போது பருகுவது தானே நல்லது. முதுமை வந்த பிறகு நீங்கள் இது குறித்து யோசித்து என்ன ஆகப்போகிறது? வயதாகி உடல் தளர்ந்து, மனம் தளர்ந்து, ஐம்புலன்களும் ஒடுங்கிய நிலையில், நீங்கள் எப்படி இந்தத் திருமலைக்கு வந்து கைங்கரியம் செய்ய முடியும்? உடல் உறுதியும், மன உறுதியும் இருக்கக்கூடிய காலத்தில் அல்லவா நீங்கள் இங்கு வர வேண்டும். பகவானைத் துதிக்க வேண்டும். பகவானுக்குக் கைங்கர்யங்கள் செய்ய வேண்டும் என்று மற்றவர்களைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

பெரியாழ்வார் இதே கருத்தை வேறொரு பாசுரத்தில் உருக்கமாகச் சொல்வார்.

*சோர்வினால் பொருள் வைத்துண் டாகில்*
*சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து*
*ஆர்வி னவிலும் வாய்திற வாதே*
*அந்தக்காலம் அடைவதன் முன்னம்*
*மார்வ மென்பதோர் கோயி லமைத்து*
*மாத வனென்னும் தெய்வத்தை நாட்டி*
*ஆர்வ மென்பதோர் பூவிட வல்லார்க்கு*
*அரவ தண்டத்தில் உய்யலு மாமே*

மனித வாழ்வு முறைப்படி வாழ்ந்தால் மகத்தானது: இல்லை எனில் கொடுமையானது: அந்தக் கொடுமைகளில் ஒன்று முதுமை.

## சங்குகளின் பெயர்கள்

**சங்குகளில் வலம்புரிச் சங்கு மிகவும் சக்தி வாய்ந்தது என்பதும், அதில் பெருமாளுக்குரியது ஒன்பது (9) சங்குகள் எனவும், மகாபாரத நாயகர்களான பஞ்ச பாண்டவர்களுக்கு உரிய சங்கு ஐந்து (5) எனவும் வைகானச ஆகமம் கூறியுள்ளது.**



**அவைகள் பெயர் என்ன, யாருக்கு என்ன சங்கு என்பதை பார்ப்போம். 1) ஸ்ரீகிருஷ்ணர் கையிலிருப்பது – பாஞ்ச சன்யம் எனும் சங்கு, 2) திருப்பதி திருவேங்கடவன் கையிலிருப்பது – மணிச் சங்கு, 3) ரங்கநாதர் கையிலிருப்பது – துவரிச்சங்கு, 4) அனந்த பத்மநாப ஸ்வாமி கையிலிருப்பது – பருதச் சங்கு, 5) பார்த்தசாரதி கையிலிருப்பது–வைபவச் சங்கு, 6) சுதர்ஸன ஆழ்வார் கையில் இருப்பது – பார்ச்சங்கு, 7) சௌரிராஜப் பெருமாள் கையிலிருப்பது – துயிலாச்சங்கு, 8) கலிய பெருமாள் கையிலிருப்பது – வெண் சங்கு, 9) ஸ்ரீநாராயண மூர்த்தி கையிலிருப்பது – பூமா சங்கு என்பனவாகும்.**

**பஞ்ச பாண்டவர்களுக்குரிய சங்குகள் : பஞ்ச பாண்டவர்கள் ஐவருமே ஆளுக்கொரு சங்குகளை வைத்திருந்தார்கள் என்பது மகாபாரதம் இயம்பும் வரலாறு. 1) தர்மருடைய சங்கு – அனந்த விஜயம், 2) பீமனுடைய சங்கு – மகாசங்கம் (பௌண்டரம்), 3)அர்ச்சுனனுடைய சங்கு – தேவதத்தம், 4) நகுலனுடைய சங்கு – சகோஷம், 5) சகாதேவனுடைய சங்கு – மணிபுஷ்பகம் ஆகியவை ஆகும்.**

–தொகுப்பு : திரு.சதா ஸ்ரீஹரிஹரன்,
கும்பகோணம், 9488241383.

அது எல்லோருக்கும் வரும்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார் சொல்லும் பாசுரம் இதனை விளக்கும்.

*வேத நூல் பிராயம் நூறு மனிசர்தாம்*
*புகுவரேலும்*
*பாதியும் உறங்கிப் போகும் நின்றதில்*
*பதினையாண்டு*
*பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத்*
*துன்பம்*
*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா*
*நகருளானே.*

ஒருவர் வாழ்நாள் 100 வயதாக இருந்தாலும் கூட, அதில் உருப்படியாக எத்தனை வருடம் தேறுகிறது என்பதை இந்தப் பாசுரத்தில் சொல்லி இருப்பார். பாதி தூக்கத்தில் போகும். பாதி ஏக்கத்தில் போகும். மீதி பல்வேறு தாக்கத்தில் போகும்.

இத்தனைக்கும் நடுவில் இறைவனை நினைக்க நேரமில்லை என்று ஏதோ ஒன்றை நோக்கி ஓடிக் கொண்டிருப்பார்கள். ஓட்டம் நிற்கும் பொழுது நம்முடைய ஆட்டம் நின்று விடும்.

பிறகு ஆண்டவனை நினைப்பது எப்போது? அவன் அருளைப் பெறுவது எப்போது?


**'உங்களுக்காக நாங்கள்'**

**உங்கள் ஆலோசனைகள்/தரிசனம், சேவைகளுக்கு தொடர்பு கொள்ள...**

**டோல் ப்ரீ எண்**
**1800-425-4141**


கை கால்கள் நன்றாக இருக்கும் பொழுது திருத்தலத்திற்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்ய முடியாதவர்கள், இரண்டு கைகளாலும் தொண்டு செய்ய முடியாதவர்கள், தங்கள் கட்டுப்பாட்டில் ஐம்புலன்களும் இல்லாது மயங்கிய நிலையில் என்ன செய்ய முடியும்? அப்பொழுது எதை யோசித்து என்ன பயன்? "இன்று இப்பொழுதே" என்று இராமாநுஜர் சத்விஷயங்களுக்கு அவசரம் காட்டிச் சொன்னது போல உடனடியாக அல்லவா திருமலைக்குச் செல்ல வேண்டும். கைங்கரியம் செய்ய வேண்டும்.

இப்பாசுரத்தின் சாரமான செய்தி என்ன தெரியுமா?

1) திருமலைக்குச் செல்லுங்கள்.

2) கைங்கரியம் செய்யுங்கள்.

3) முதுமை வந்து விட்டால் செல்வதற்கு மனம் இருந்தாலும் உடல் ஒத்துழைக்காது.

## ஸப்தகிரி டிசம்பர் 2024 விடைகள்

1. அரசாட்சி.
2. வேதாந்த தேசிகர்.
3. ஸ்ரீமகாலக்ஷ்மித் தாயார்.
4. ஆண்டாள்.
5. திருப்பாவை.
6. அனுமன்.
7. திருப்பாணாழ்வார்.
8. கர்ணன்.
9. தர்மம், லக்ஷணம், அவஸ்தா.
10. தாமரையை விரும்புபவள்.
11. தேவலோக அழகி.
12. பரணி தீபம்.
13. பின்பழகிய பெருமாள் ஜீயர்.
14. கருணைரசம்.
15. காட்டுராஜா.



## போட்டி எண். 29




**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி எ.நேயா,
   திருமங்கலம், மதுரை மாவட்டம்.
2. செல்வன் தே.உதயகுமார்,
   குன்றத்தூர், சென்னை.
3. செல்வி வி.மீனாட்சி,
   டபள்யூ.ஜி.சி. சாலை,
   தூத்துக்குடி மாவட்டம்.

அதைவிட முக்கியமான ஒரு நுட்பமான செய்தி இந்தப் பாசுரத்தில் இருக்கின்றது. இறைவனை நம்மால் தேட முடியாது. வைகுண்டத்தில் இருந்தாலும், பாற்கடலில் இருந்தாலும், அந்த இடம் எங்கே இருக்கிறது என்று எப்படித் தேடிப் போவது? அப்படியே அண்டங்களைத் தாண்டி அவ்விடம் இருப்பது தெரிந்தாலும், அங்கே செல்வதற்கு நம்மால் முடியுமா? நாலு எட்டு நடந்து பக்கத்தில் உள்ள கோயிலுக்குச் செல்வதற்கே நாக்கு தள்ளுகிறதே.

ஆனால், அந்த எம்பெருமானே அசக்தர்களான நம் மீது பரிவு வைத்து நம்மைத் தேடி இதோ திருமலையில் வந்து எழுந்தருளி இருக்கின்றானே, இதை விட எளிமையான ஒரு வாய்ப்பு நமக்கு வேறு என்ன உண்டு?

நமக்காக வந்த திருமலையப்பனிடம் நாம் சென்று சரணம் புகுவோம். இந்தக் கலி காலத்தில் அது எளிதில் நடக்கக் கூடியதே. இனி அழகான வியாக்கியானத்தையும் ஒரு முறை சேவிப்போம்.

பரமயோக்யமான திருமலையையே பரம ப்ராப்யமாகப் பற்றுங்களென்று பிறர்க்கு உபதேசிக்கிறார். எம்பெருமான் சேதநர்களுக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து ஆயுளையும் அருளுகிறான். இவை எதற்காகவெனில், திருமலை முதலான திருப்பதிகளிலே சென்று வழிபாடு செய்வதற்காகவேயன்றி வேறொரு காரியத்திற்காகவன்று.

ஆயினும் உலகோர் உடலில் வலிமையுள்ள காலங்களில் விஷயாந்தரங்களிலே மண்டிக் கிடந்து திவ்ய தேச வழிபாடுகளைப் பற்றிப் போகப் போகப் பார்த்துக் கொள்வோம் என்று பதற்றமற்று ஆறியிருந்து விடுகிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே பல வகைகளிலும் தளர்ச்சி வந்து சேர்கின்றது. அப்போது திவ்யதேச வழிபாட்டை நெஞ்சிலும் நினைக்க ப்ரஸக்தி இல்லையாகிறது. அங்ஙனம் ஆகாமே திருமலையப்பன் பணியின் என்றாயிராயிற்று, எம்பெருமானுக்குப் பரமபோக்யமான சயனமாகத் திருவனந்த ஆழ்வான் இருக்கவும் அவனையும் விட்டுத் திருமலையில் வாஸம் மிகவும் ருசித்தது என்பதை மூன்றாமடி காட்டும்.

பாசுரம் அறிவோம்...



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

1. ஸ்ரீரங்கத்தில் உக்குபல்லவராயன் மடத்தில் தன்னுடைய காலக்ஷேப மண்டபத்துக்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் வைத்த திருநாமம் என்ன?
   திருமங்கையாழ்வார் காலக்ஷேப மண்டபம்.
2. இராமாநுஜரின் 5 ஆசார்யர்களுள் திருக்குருகைப் பிரான் என்ற திருநாமம் கொண்ட ஆசார்யர் யார்?
   திருக்கோட்டியூர் நம்பிகள்.
3. ஸ்ரீரங்கபதியான அழகிய மணவாளப் பெருமாளுக்கு நம்பெருமாள் எனப் பெயர் வைத்த வண்ணான் ஸ்வாமி யார்?
   ராஜகந்த கோபாலன்-ஈரங்கொல்லி வண்ணான்.
4. பொன்னடிக்கால் ஜீயர் ஸ்வாமி பாத ஸ்தாநீயர் யார்?
   அப்பாச்சியாரண்ணா.
5. நம்பிள்ளை ஸ்வாமி பாத ஸ்தாநீயரான ஆசார்யர் யார்?
   பின்பழகிய பெருமாள் ஜீயர்.
6. சதுர்வேதிமங்கலம் எந்தத் திவ்ய தேசத்தில் உள்ளது? அந்த சன்னிதி நிர்மாணம் செய்த ஆசார்ய புருஷர் யார்?
   ஆழ்வார் திருநகரி, திருவாய்மொழிப்பிள்ளை.
7. ஆளவந்தார் கோஷ்டியிலும், இராமாநுஜர் கோஷ்டியிலும் பெரியோர்கள் மூலமாக வ்யவஹரிக்கும் ஆசார்ய புருஷர்கள் யார்?
   பெரியவர் என்று சொல்லப்படும் ஸ்ரீமத் சடகோபருக்கு திருக்குருகைப்பிரான் எனும் திருநாமம் உண்டு. அந்தத் திருநாமம் பெற்ற திருக்கோட்டியூர் நம்பி ஆளவந்தார் சீடர்கள் கோஷ்டியில் மற்றும் திருக்குருகைப்பிரான் பிள்ளான் இராமாநுஜருடைய சீடர்கள் கோஷ்டியில் பெரியவராக சொல்லப்படுகிறார்கள்.

**– தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**

**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**




***“சுட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா”*** (திரு.வாய் 3.1.2) என்கிறபடியே எம்பெருமான் திருவடிகளுக்குத் தாமரைப்பூ சமமாகாது. இக் கருத்தையே கடைசி வரியான ***“தத்தாம் ஹ்ருத்தாப சாந்த்யை சிசிரம்ருதுய தாநிர் ஜிதாப்ஜே பதாப்ஜே”*** தெரிவிக்கின்றது. தாமரைப் பூவிற்கும் திருவடிகளுக்கும் இடையிலுள்ள ஒப்புமையில் குளிர்ச்சி, இளமை, (ஸௌகுமாரம்) மட்டுமின்றி நறு நாற்றம் முதலியவை சமானமாயிருந்தாலும் மனத்துயரைத் துடைப்பதற்கு முக்கியமாகக் குளிர்ச்சி, இளமை முதலியவை மிகமிக முக்கியமாதலால் அவை மட்டும் இங்கு பின்பற்றப்படுகிறது என்று சொல்லலாம்.

இப்படி இந்தச் சுலோகம் பல சிறப்பான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. திவ்யமான ரூபத்தைப் பாதாதிகேசம் (திருவடி முதல் கிரீடம்) வரை சேவிக்கலாம் என்பதை “ஆபாத சூடம்” என்னும் சொல் தெரியப்படுத்துகிறது.

***அப்ஜேந ஸத்ருசி ஸந்ததமிந்தே***
***ஹ்ருதபுண்டரீக குண்டே ய :।***
***ஜடிமார்த்த ஆச்ரயேதத்புத***
***பாவகமேநம் நிரிந்தநம் ஜ்வலிதம்॥***

**பதவுரை**

ஸததம் – எப்பொழுதும், இந்தே – வெளிச்சமானது; அப்ஜே – தாமரையோடு, ய:– எந்த அக்னி உள்ளதோ, ஸத்ருசி – சமமான; ஹ்ருத்புண்டரீககுண்டே – இதய தாரையான குண்டத்தில், நிரிந்தநம் – விறகு (கட்டை) இல்லாமல்; ஜ்வலிதம் – எரிகின்றதான, ஏதம் – இந்த, அத்புதகபாவகம் – வியப்பான அக்னி வடிவில் எம்பெருமானை, ஜடிமா – நோய் (சம்சார வியாதியான வேதனையோடு); ஆர்த்த: – அவதிப்படுகின்ற (நான்); ஆச்ரயே – தஞ்சமடைகின்றேன்.

**விரிவுரை**

இந்தச் சுலோகமானது, விஷ்ணு ஸூக்தத்தில் எடுக்கப்பட்ட “பத்ம கோஸ ப்ரதீகாசம் ஹ்ருதயம்... தஸ்யமத்யே வஹ்நி சிகா” முதலான ஸூக்தங்களால் பின்பற்றியது.

ஜீவாத்மாக்களுடைய இதய கமலத்தில் எம்பெருமான் அக்னி வடிவனாகப் பிரகாசிக்கிறான் என்று ச்ருதி சொல்லுகிறது. அந்த இதயம் “பத்ம கோஸ ப்ரதீகாசம்” என்கிறபடியே தாமரை போன்ற அந்த இதயத்தாமரையே ஒரு வைதீக அக்னியாக ஒளிர்கின்ற ஹோமகுண்டமாம். அதில் பரமாத்மா தினமும் அக்னியைப் போலே பிரகாசிக்கிறானாம். இந்த அக்னிக்கு எரிபொருளான எந்த விறகும் தேவையில்லையாம். சம்சாரத்தால் வந்த நோயாலே அவதிப்படுகின்ற நான் (அநந்தாழ்வார்) இந்த தெய்வீக அக்னியைத் தஞ்சம் அடைகிறேன் என்பது கருத்து.

“நிரிந்தநம்” என்னும் அடைமொழி (விசேஷம்) உலகிலுள்ள அக்னியைக் காட்டிலும் இதயத்தில் எழும் நெருப்பின் பெருமை நிரூபிக்கப்படுகின்றது. ஆகையால் “அத்புத” சப்தம் நயமுடைத்து. அவ்வாறே “ஸந்ததமிந்தே” என்றும் பிரயோகமானது சாதாரண ஹோமகுண்டத்தை விட இதயத் தாமரைக் குண்டத்துக்கான பெருமையும் சொல்லப்படுகின்றது. “ஜடிமார்த்த:” சிறப்புடையது.

ஜ்வலித நாநா நாக ஸ்ருங்கக
மணிகணோதித ஸுபர பாகக
கநநி பா பா பா ஸுராங்கக
வ்ருஷகிரிச்வர விதர சம்மம
ஸுஜநதாதாதாயிதா கில ஹித
ஸுசீதல குணகணாலய
விஸ்ரும ரரராராதுதித்வர
ரிபுபயங்கரகர ஸுதர்சந ।
ஸகல பாபாபாரபீரகநர
வாகர ஸுதர ஸாதரம்
அவது மாமாமாக ஸம்ப்ரு
மகணநோசித குணரமேச்வர
தவக்ருபா பாபாட விஹதிதவ
ஹுதா சந ஸம ஹிமாத்ருவம்
இதர தாதாதாரமஸ்த்ய ககண
விமோசநமிஹ ந கிஞ்சந ॥

**பதவுரை**

ஜ்வலித – பிரகாசித்த, நாநா – அநேகமான, நாக – ஆதிசேஷனுடைய, ச்ருங்கக – தலைமீதுள்ள, மணிகண – மாணிக்கக் கூடங்களாலே, உதித – உதய மான, ஸுபரபாகக – நல்ல மாறுபட்ட அழகை (பர பாகசோபை) உடையவனே, கநநிபா – மேகத்தைப் போன்ற, ஆபா – ஒளியோடு, பாஸுர – பிரகாசிக்குமதான, அங்கக – திவ்யாவயங்களையுடைவனே! வ்ருஷகிரீச்வர – வேங்கடேச்வரனே, சம் – சுகத்தை, மம – எனக்கு, விதர – அளிப்பாய், ஸுஜநதா – நல்ல ஜந சமூகத்துக்கு, தாதாயித – தந்தை போன்றவனே! (ரக்ஷகனே), அகில – எல்லா ஜனங்களுக்கு, ஹித – நன்மையான, ஸுசீதல – குளிர்ந்த, குண கண ஆலய – குணதிரட்சிக்கு (ஸமூகம்) நிலையானவனே!

விஸ்ருமராரா – அகன்ற ஆயுதங்களை உடைய, ஆராத் – தூரத்திலிருந்தே, உதித்வரிபு பயங்கர – உதிக்கின்ற பகைவர்களுக்கு பயத்தை உண்டாக்குகின்ற, கரஸுதர்சந– திருக்கரத்திலே ஸுதர்சன ஆழ்வானையுடையவனே! ஸகலபாப – எல்லாப் பாவங்களுக்கு, அபாரபீகர – எல்லையற்ற பயங்களை உண்டுபண்ணுவது, கநரவ ஆகா – மிகுந்த ஒலிக்கு மூலமாகும்.

ஸுதர – மேன்மையான, சங்கை உடையவனே! அமாக ஸம்ப்ருதம் – பக்குவமற்ற பாவசமூகத்தாலே நிறைந்த (கொழுத்த அபராதியான), மாதி – என்னை, ஸாதரம் – ஆதார பூர்வமாக, அகணன உசித – கணக்கற்ற, குண – குணங்களை உடையவனே, ரமா ஈச்வர –ச்ரிய: பதி;

பாப அடவி – பாவக் காட்டையுடைய, ஹதி – எரிக்கின்ற, தவஹு தாசன ஸமஹிமா – பெருமை உடையதான, தவ – உன்னுடைய, க்ருபா – தயை நெருப்பைப் போன்ற (அருள்), த்ருவம் – தவறாமல், அவது – ரக்ஷிப்பாயாக! அத – இன்றும், இத ரத – வேறு விதமான, அத$_2$ரம் (அத$_4$ரம் ) – அச்சம் தருகின்ற, பாவஸமூக – அழிவு, இஹ – இனும் (உபாயத்தில்), நகிஞ்சந அஸ்தி – ஒன்றும் இல்லை, அத – இன்றும், அத$_4$ரம் – ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத் துக்கு விரோதியானவனை முழுமை யாக விலக்கப்படுகிறது என்றும் பொருள் கொள்ளலாம்.

இன்னும் ஜ்லிக்கும்...






**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| 06-02-2025 | வியாழன் | ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி |
| 07-02-2025 | வெள்ளி | ஸ்ரீபார்த்தசாரதி ஸ்வாமி |
| 08-02-2025 | சனி | ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி |
| 09-02-2025 | ஞாயிறு | ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி, ஆண்டாள் தாயார் |
| 10-02-2025 | திங்கள் | ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி |
| 11-02-2025 | செவ்வாய் | ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி |
| 12-02-2025 | புதன் | ஸ்ரீகோவிந்தராஜஸ்வாமி |

**திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம்**

திருப்பதி இரயில் நிலையம் அருகில் உள்ள கோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் எதிரில் அமைந்துள்ள திருக்குளம் அழகாக வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படும். அத்திருக்குளத்தில் மாக மாதத்தில் (தை அல்லது மாசி) பௌர்ணமியில் ஸ்வாமி எழுந்தருள்வார்.

# மஹாசிவராத்திரியும் சிவாலய ஓட்டமும்







**மகாசிவராத்திரி நாளில் சிவபெருமானை நான்கு காலங்களிலும் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட்டு இம்மை மறுமைப் பயன்களை ஒவ்வொருவரும் பெற வேண்டும். சிவராத்திரி நாளில் சிவபுராணம், திருவாசகம், தேவாரம் முதலிய தோத்திரங்களைக் கூறியும் வழிபட வேண்டும். அப்பரமேஸ்வரனும் அளவற்ற அருட்செல்வத்தை வாரி வழங்குவான்.**







### மகா சிவராத்திரி

சிவபெருமானுக்கான நோன்புகள் (விரதங்கள்) எல்லாவற்றுள்ளும் முதன்மையானது மகாசிவராத்திரி நோன்பாகும். மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தியன்று கொண்டாடப்படும் இந்நோன்பு விழா, நம் பாரதம் முழுவதும் கடைபிடிக்கப்படும். சிவச்சிந்தனையோடு நோன்பிருந்து, சிவவழிபாடும், சிவபூஜையும் செய்வோர் பலப்பல பலன்கள் பெற்றுச் சிவனருள் கிடைக்கப் பெறுவார்கள்.

### லிங்கோத்பவம்

சிவபெருமான் பேரொளியாக அருட்பெருஞ் சோதியாக விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கி உயர்ந்து நின்றார். அந்த நெருப்புச் சோதியிலிருந்து மான், மழு, அபய, வரத முத்திரைகளோடு, லிங்கோத்பவராகத் தோன்றி, அனைவருக்கும் அருள் செய்வர். இன்றைய நாளில் நீங்கள் ஆகம முறைப்படி சிவனைப் பூசித்து வணங்கினால், உங்களின் சகல பாவங்களும் தீர்ந்து சித்தியடையலாம். ஆகவே இம்மை, மறுமைப் பயன் வேண்டி நிற்போர் சிவராத்திரியின் நான்கு காலப் பூசைகளையும் செய்து வழிபட்டால் வேண்டிய வரங்கள் கிடைக்கும் என்பது முன்னோர் காட்டிய வழிமுறையாகும்.

### சிவராத்திரியின் பெயர் விளக்கம்

இரவு என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து இராத்திரி என்ற சொல் பிறக்கும். பகலில் உழைத்துக் களைத்து சோர்ந்து போகும் உயிர்களுக்கு இன்பத்தையும் ஓய்வையும் தரும் காலமே ராத்திரி என்று கூறலாம்.

மேலும், இதனுடைய நுண்பொருள் "உலக உயிர்களுக்கு ஒப்பற்ற மோட்ச வீட்டைக் கொடுப்பது" என்பதாகும்; அதை அளிப்பவர் சிவபெருமான். ஆதலால் சிவராத்திரி என்று அழைப்பர். சிவராத்திரி வழிபாட்டின் பயன் இவ்வுலகில் இம்மைக்கும், அவ்வுலக வாழ்வான மறுமையில் சிவலோக வீடுபேறு அடைவதும் ஆகும்.














## சிவராத்திரிக்குரிய சிறப்புமிக்க தலங்கள்

அனைத்துச் சிவாலயங்களிலும் சிவனைச் சிவராத்திரியில் பூசை செய்தாலும், சிவராத்திரி கதைகளோடு தொடர்புடைய சிவத்தலங்களில் சென்று தரிசித்தால் அளவற்ற நன்மைகள் பெறலாம் என்பது மரபு. அவையாவன: 1) திருவண்ணாமலை, 2) திருக்கடையூர், 3) காஞ்சிபுரம், 4) ஸ்ரீசைலம் (ஆந்திரா), 5) திருவைகாவூர், 6) திருக்கோகர்ணம் (கர்நாடகம்), 7) ஓமாம்புலியூர், 8) காளஹஸ்தி (ஆந்திரா).

## சிவாலய ஓட்டம்

பக்தர்கள் மிகவும் தூய்மையாக, மஞ்சள், சிவப்பு முதலிய ஆடைகளுடன் ஒரு வாரம் முன்னதாகவே நோன்பிருந்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருமலை, திருக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மலை, பன்னிப்பாக்கம், கல்குளம், மேலாங்கோடு, திருவிடைக்கோடு, திருவிதாங்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் ஆகிய தலங்களில் உள்ள 12 சிவாலயங்களைச் சிவராத்திரியன்று, ஒரே நாளில் ஓடிச் சென்று வணங்குவதைச் சிவாலய ஓட்டம் என்பார்கள்.

முதலில் திருமலை என்ற தலத்தில் உள்ள மகாதேவர் என்னும் பெயருடைய சிவபெருமானைப் பூசை செய்து ஓட்டத்தைத் தொடங்கி, திருநட்டாலம் என்ற தலத்தில் உள்ள சிவபெருமானை வணங்கி ஓட்டத்தைப் பூர்த்தி செய்வர். அப்படிச் செய்தாலும், பெரும்பாலோர் சுசீந்திரம் சென்று தாணுமாலயப் பெருமானை (சிவன், விஷ்ணு, பிரமன்) (மும்மூர்த்திகளின் முழுச்சக்தி வடிவம்) வணங்கிய பின்னரே நிறைவு செய்வார்கள்.

இச்சிவாலய ஓட்டத்தின் தொலைவு சுமார் 70 கி.மீ. என்பர். இதில் பங்கேற்கும் அனைவரும் கோவிந்தா, கோபாலா என்று சொல்லிக்கொண்டே ஓடுவதும், ஒருவரையொருவர் கோவிந்தா, கோபாலா என்று சொல்லியழைத்துச் செல்வதும், சைவ, வைணவ ஒற்றுமைக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும்.

***முனைவர் ச.செந்திலாண்டவன்,***
***சென்னை, 94445 82856***















ஆதி பரம்பொருளான ஈசனின் வாகனமாகவும், சிவ கணங்களுக்குத் தலைவராகவும் திகழும் நந்தியம்பெருமான் கைலாயத்தைக் காவல் காப்பவர் ஆவார்.

### நந்தி தந்த சாபம்

ஒரு சமயம் நந்தியம்பெருமான் கைலாயத்தைக் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது இலங்கை வேந்தன் இராவணன் தன்னுடைய ஆகாய ஊர்தியில் கைலாயத்தைக் கடந்து செல்ல முயன்றான். அப்போது நந்திகேசுவரர் தம்முடைய அனுமதியின்றி மேலே பறந்து செல்லும் வாகனத்தைத் தடுத்து நிறுத்தினார்.

வெகுண்டெழுந்த இராவணன் காளை முகம் கொண்ட நந்தியம்பெருமானை ஏளனம் செய்யும் விதமாக "குரங்கு முகம் கொண்ட நீயா என்னைத் தடுப்பது" என்று இகழ்ந்தான். அதனைக் கேட்ட நந்தியம்பெருமான் இராவணனைப் பார்த்து, வானரம் என்று என்னை இகழ்ந்ததால் அதே "குரங்கு முகம் கொண்ட வானர இனங்களினால் நீ அழிவாய்" என்று சாபம் தந்தார். இதனை ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய இராமாயண உத்தரகாண்டத்தில் எடுத்துரைத்துள்ளார் என்பது கூடுதல் சிறப்பாகும்.

### புராணத்தில் நந்தி

ஊழிக்கால மஹாபிரளயத்தின் போது இறைவன் உடனிருப்பது தர்மவிடை என்னும் தர்மநந்தி ஆகும். இதனைத் தவிர பிரம்ம நந்தி, இந்திர நந்தி, மால்விடை (விஷ்ணு நந்தி) மற்றும் அதிகார நந்தி என ஐந்து நந்திகளைப் பற்றியும், பரம்பொருளான சிவபெருமானது திருவிளையாடல்களில் வடிவ கோலங்கள் மாறுவது போல நந்தியம்பெருமானும் தனது வடிவத்தை தேவரூபம், ரிஷப ரூபம், அதிகார ரூபம், சில ஆலயங்களில் மட்டும் காணப்படும் அரி எனும் (குரங்கு) மாருதி முகத்துடன் கூடிய ரூபம் என பல வடிவங்களில் பின் தொடர்ந்து சென்றதாகவும் புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

– படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

# அரிமுகம் கொண்ட அதிகார நந்தி

**சிந்தை வியக்கும் விந்தை சிற்பங்கள்**






இரிஷபக்காளை முகமுடைய அதிகாரநந்தி தூண் சிற்பம் மாடம்பாக்கம் - (சென்னை)

இப்புராணங்களில் கூறிய அரிமுகம் எனும் மாருதி (குரங்கு) முகம் கொண்ட நந்திகேஸ்வரர் சிற்பங்கள் தமிழகத்தில் உள்ள சில சிவாலயங்களில் மட்டுமே அமையப்பெற்றுள்ளது.


## நந்தி வடிவச் சிறப்பு

1)முழுவதும் காளை உருவத்துடன் நந்தியாகவும், 2)காளையின் தலையுடனும் மனித உடலமைப்புக் கொண்டு மிருதங்கம் வாசிப்பவராக வும், சில இடங்களில் மிருதங்கம் இல்லாமலும் தூண் சிற்பமாக இருப்பார். 3)அதிகார நந்தி : முழுவதும் மனித உருவம் கொண்டவராக சிவனின் அம்சங் களைத் தாங்கியுள்ள சந்திரசேகரர் போன்று காட்சியளிப்பார். சிவாலய கோபுர வாயிலில் மான், மழுவை முறையே பின் இடது, வலது கரங்களில் தாங்கி, முன்னிரு கரங்கள் அஞ்சலி பந்தத்துடன் மார்பில் வாளை அணைத்து இறையை வணங்கும் தன் தேவி ஸ்ரீசுயம்பிரகாசிகையுடன் அருள்பவர். சில ஆலயங்களில் தேவி இல்லாமல் தனியாகவும், அரி முகத்துடன் எழுந்தருளியுள்ள இவரையும் அதிகார நந்தி என்று அழைப்பார்கள்.

மேற்காணும் அரிமுக (மாருதி) சிற்பங்களில் நிழல் படங்கள் உள்ள ஆலயங்கள் : தமால் (அமர்ந் தக் கோலச் சிற்பம்), தேவிகாபுரம் (பிரம்பு ஊன்றியக் கோலச் சிற்பம்), மாகறல் (சிலை), தாராசுரம் (தூண் சிற்பம்) மற்றும் இதுபோல் திருவலம், காக்கூர், இராமேஸ்வரம் (உற்சவ மூர்த்தியாக உள்ளது) ஆகிய கோயில்களிலும் மற்றும் இன்னும் சில ஆலயங்களிலும் இச்சிற்ப வடிவங்கள் உள்ளன.

**குறிப்பு : நிறைவாகக் காணப்படும் இம்மூன்றுச் சிற்பங்கள் போல் பல தமிழக ஆலயங்களில் காணப்படுவது கூடுதல் சிறப்பாகும்.**

மேலும், வேலூரில் காளை முகத்துடன் மானுட உடலுடன் மிருதங்கம் வாசிக்கும் தூண் சிற்பம் மற்றும் மாடம்பாக்கத்தில் காளை முக வடிவத் தூண் சிற்பமாகவும், திருவாமாத்தூரில் மனித முக சிற்பமாகவும், அதிகார நந்தி உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



தத்$_3$வ்யாஸஸூத்ரம் விவரீவரிஷ்யே
தத்தாதநாமாபி சட$_2$ாரிநாம ।
யுக்தம் வித$_4$ாஸ்யாம்யுப$_4$யோரிதீர்ய
ராமாநுஜோ஽வந்த$_3$த தத்பத$_3$ாப்$_3$ஜே ॥

(36)

**(திருவிரல்கள் மடங்கியிருப்பதற்குக் காரணமான ஆளவந்தாருடைய மூன்று மனக்குறைகள் பற்றிக் கேள்விப்பட்ட ஸ்ரீராமாநுஜர், அவருடைய மனக் குறைகளைத் தீர்ப்பதற்காக) "1)வியாஸரின் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் எழுதி விவரிப்பேன், 2)அவருடைய தகப்பனாரான பராசரரின் பெயரையும், 3)நம்மாழ்வாரின் திருநாமத்தையும் பொருத்தமாக இருவருக்கு இடுவதன்மூலம் அவர்களுக்கு நன்றி செலுத்துவேன்" என்று ப்ரதிஜ்ஞை செய்து, அவரது திருவடித் தாமரையிணையை வணங்கினார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 23 :** *''மைத்ர்யாதிஷு பலானி''*

மனித இனத்திலும், பிராணிகளிலும் நட்புடன் எண்ணம் கொண்டு அந்த நட்பில் சஞ்யமம் செய்தால், யோகி அனைவருக்கும் பிரியமான நண்பனாகி விடுவான்.

சமாதி பாதத்தில் 33 வது சூத்திரத்தில் மைத்ரீ, கருணா, முதிதா, உபேக்ஷா என்று நட்பு, கருணை, மன மகிழ்ச்சி, லட்சியம் ஆகிய நான்கு குணங்களை மனதில் கொள்ளும் போது மனம் சுத்தமாகி மனமகிழ்வு ஏற்படும் என்று கூறியிருந்தார்கள். அதில் கூறப்பட்ட மைத்ரீ என்ற நட்பு, கருணை, மனமகிழ்ச்சி இந்த மூன்றிலும் சஞ்யமம் செய்தால் அந்த மூன்றும் பலப்படும். அதாவது நட்பில் சஞ்யமம் செய்தால் அனைவருக்கும், பிராணிகளுக்கும் சுகம் தரும் நண்பனாகி விடுவான்.

**சூத்திரம் 24 :** *''பலேஷு ஹஸ்திபலாதீனி''*

வலிமையில் சஞ்யமம் செய்தால் யோகி அளவற்ற வலிமை பெற்று விளங்குவான். யானையின் பலத்தில் சஞ்யமம் செய்தால் யானை பலத்தைப் பெறுவான்.

சிங்கத்தின் பலத்தில் சஞ்யமம் செய்தாலும் சிங்கத்தின் பலத்தைப் பெறுவான்.

அளவிட முடியாத வாயுவின் ஆற்றலில் சஞ்யமம் செய்தாலும் வாயுவின் வேகத்தில் சித்தம் அதுவாகவே மாறிவிடும். அதன் பலனாக சரீரத்தில் வாயுவின் வேகம் பலமும் வந்துவிடும்.

**சூத்திரம் 25 :** *"ப்ரவ்ருத்யா லோகன்யாஸாத் ஸுக்ஷ்மவ்யவஹித விப்ரக்ருஷ்ட க்ஞானம்''*

சமாதி பாதத்தில் 36வது சூத்திரத்தில் கூறப்பட்டது சித்தத்தின் சாத்வீக அப்யாசத்தால் சோகத்தைத் தரக்கூடிய ராஜஸ குண பரிணாமம் விலகிப் போன பின் சாத்வீக பிரகாசம் அதிகமாகவும் சிறந்ததாகவும் இருக்கப்படும். மனதின் இயல்பை ஜ்யோதிஷ்மதி பிரகாசம் என்று கூறுவார்கள். அச்சமயம் சோகமில்லா தெளிவான பிரகாசம் மனதை ஸ்திரப்படுத்துகிறது. மனதின் அந்த ஜோதிஷ்மதி பிரகாசம் புலன்களுக்கு அப்பாற்பட்ட சூட்சும விஷயத்தையும் மிகத் தொலைவில் இருப்பதையும் யோகியின் மனம் வெளிச்சப்படுத்திக் காட்டி விடுகிறது.

**சூத்திரம் 26 :** *"புவனக்ஞானம் ஸூர்யே ஸஞ்யமாத்''*

அனைத்து உயிர்களுக்கும் கண்கண்ட தெய்வமாக இருக்கிறது சூரியன். சூரியன் அனைத்து உலகங்களையும் பிரகாசிக்கச் செய்கிறது. சூரியனின் யோகி சஞ்யமம் செய்யும் போது அவனுக்கு எல்லா உலக ஞானமும் உண்டாகும்.

முன் சொன்ன சூத்திரத்தில் மனதின் சாத்வீக ஜோதிஷ்மதி பிரகாசத்தைச் சார்ந்து சஞ்யமம் செய்யச் சொல்லியிருந்தார்கள். இதில் சூரிய பிரகாசத்தில் சஞ்யமம் செய்து பல உலகங்களை பிரத்யட்சமாகக் காணலாம்.

ஈரேழு பதினான்கு உலகங்களையும் பூகோளத்தையும் அதில் இருக்கும் ஏழு கடல்களையும் யோகியானவன் ஒளிவு மறைவின்றி பிரத்யட்சமாகக் கண்டு கொள்வான்.

**சூத்திரம் 27 :** *“சந்த்ரே தாராவ்யூஹக்ஞானம்”*

சந்திரனில் சஞ்யமம் செய்தால் வானத்து நட்சத்திரத் தாரகைகளைப் பற்றிய ஞானம் வரும். இந்த நட்சத்திர சமூகம் இந்த இடத்தில் இந்தத் திசையில் இருக்கிறது என்று நட்சத்திரங்களை, கிரகங்களை, தாரகைகளை நன்கு அறியலாம்.

இப்பூமியானது ஒரு நாளில் இரண்டு மணி நேரம் ஒரு ராசி என்கிற கணக்கில் 12 ராசிகளை ஒரு முறை பார்க்கிறது. ஆனால் ஒவ்வொரு ராசியில் ஒவ்வொரு மாதம் தங்கி விடுகிறது. அதன்படி 12 மாதங்களில் 12 ராசிகளைச் சுற்றி விடுகிறது.

சந்திரன் ஒரு மாதத்தில் பூமியைச் சுற்றி வந்து விடுகிறது. அதாவது சந்திரன் ஒரு மாதத்தில் 12 ராசிகளில் ஒரு முறை சுற்றி வந்து விடுகிறது. ஆதலால் ஒரு வருடத்தில் சந்திரன் 12 ராசிகளில் 12 முறை சுற்றி வந்து விடும். அதன் காரணமாக சந்திரனில் சஞ்யமம் செய்தால் ராசி சக்கர ஞானம் எளிதாகி விடும்.


**சூத்திரம் 28 :** *“த்ருவேக தக்கதிக்ஞானம்”*

துருவ நட்சத்திரத்தில் சஞ்யமம் செய்தால் நட்சத்திர தாரகைகளின் போக்கை நன்கு அறிந்து கொள்ளலாம். தாராகணங்கள் எப்படி நகர்கின்றன என்பதை அறியும் ஞானம் உண்டாகும்.

ஸ்ரீவியாச பாஷ்யம் கூறுகிறது – வாகனத்தில் பறக்கும் தெய்வ விமானங்களில் சஞ்யமம் செய்தாலும் வானவியலை அறியும் ஞானம்

தசாவதாரப் பெருமாள்!

# மழுவாளி இராமன்



நன்றி
பகவத் விஷய கட்டுரைகள்
(பாகம்-1)

**கார்த்தவீர்யார்ஜுனன் புதல்வர்கள், தன் தந்தை ஜமதக்னியைக் கொன்றதற்குப் பழி வாங்க சீற்றத்துடன் சூளுரைத்துப் புறப்பட்ட அவதாரம் பரசுராம அவதாரம். குணம் மிக்கவன் எனக் கூற இயலா விட்டாலும் பகவானின் ஆவேச அவதாரம் என்பதால், திருமங்கை ஆழ்வார் தசாவதாரப் பாடலில் அவ்விராமனையும் அன்புடன் அழைப்பதைக் காணலாம்.**

*“வென்றி மாமழு வேந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால்*
*கொன்றதேவ! நின் குரைகழல் தொழுவது ஓர் வகை எனக்கு*
*அருள்புரியே!”*

**என்கிறார்.**

*முழு திவ்வையகம் முறைகெட மறைதலும் முனிவனும் முனிவெய்தி*
*மழுவினால் மன்னர் ஆருயிர் வவ்விய மைந்தனும் வாரானால்*
*ஒழுகு நுண்பனிக்கு ஒடுங்கிய பேடையை அடங்க அஞ்சிறைகோலி*
*தழுவு நள்ளிருள் தனிமையின் கடியது ஓர் கொடுவினையறியேனே*

**மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும் சீரிய சிங்கத்தின் அணைப்பில் உள்ள பேடையை (பெண் சிங்கத்தினை) நினைவு கூர்ந்து, தலைவனைப் பிரிந்த தலைவி இரவின் கொடுமையை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது பரகால நாயகியின் இவ்வகத்துறைப்பாடல்.**

*வடிவாய் மழுவே படையாக வந்து தோன்றி மூவெழுகால்*
*படியார் அரசு களைகட்ட பாழியானை அம்மானை*

**தம் தசாவதாரப் பதிகத்தில் கலியன் காட்டுகிறார்.**

**ஸ்ரீராமாயணத்தில் சீதா கல்யாணத்துக்குப் பிறகு வந்து தசரத ராமனை அச்சுறுத்தி,அவனிடம் தோற்று சக்கரவர்த்தித் திருமகன் புகழை உயர்த்திய அவதாரம் இது.**

## நூல் மதிப்புரை




**கிடைக்குமிடம்:**
**முல்லை பதிப்பகம்,**
**எண்.323/10,**
**கதிரவன் காலனி,**
**அண்ணா நகர்**
**(மேற்கு),**
**சென்னை – 600 040.**

நூலின் பெயர் : மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை, ஆண்டாள் அருளிய திருப்பாவை

ஆசிரியர் : தமிழ்க்கடல் ராய.சொ

விலை, செல் : ரூ. 50/-, 9840358301

திருவெம்பாவை, திருப்பாவை என்ற இரண்டு பாவை பாட்டுக்களும் சேர்ந்தது இந்நூல். திருவெம் பாவை மாணிக்கவாசகர் அருளியது. திருப்பாவை ஆண்டாள் நாச்சியார் அருளியது. இரண்டும் "பாவாய்" என்று முடியும் பாசுரங்களைக் கொண் டவை. திருவெம்பாவை இருபது பாட்டுகள் உடை யது. திருப்பாவை முப்பது பாசுரங்கள் கொண்டது.

- திருவெம்பாவை சிவபெருமானின் சீர் பரப்பு வது. திருப்பாவை திருமாலின் புகழைப் பாடு வது. சிவன் ஆயினும், திருமால் ஆயினும் பெயர் வேறே தவிர இறை ஒன்றே என்பது அறிஞர் கண்ட முடிவு.
- திருவெம்பாவை சிவனோடு இரண்டறக் கலந்த ஆண் தகையார் பாடியது. திருப்பாவை திருமாலை அன்றி அறியாத பெண்ணரசி பாடியது.
- திருவெம்பாவை சிவன்புகழ் பாடுவதில் இணை அற்ற நூலாகிய திருவாசகத்தின் ஒரு பகுதி.
- திருப்பாவை திருமால் சீர் பரவுவதில் தலைசிறந்த நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் ஒரு பகுதி.
- மார்கழி மாதத்தில் பாவை நோன்பு மேற்கொள்பவர்களுக்கு பாவை பாடல்களை படித்திட மிகச் சிறந்த நூலாகும்.
- ஆன்மீக அன்பர்கள் வாங்கிப் படிக்க வேண்டிய அற்புதமான நூலாகும்.

**– திரு.மு.பழநியப்பன், சென்னை**

கிடைக்கும். வெளி சஞ்யமங்களைக் கூறி முடித்த பின் இனி சரீரத்தினுள் சஞ்யமங்களின் பலன்களைக் கூறுகிறார்கள்.

**சூத்திரம் 29 :** *"நாபி சச்ரே காயவ்யூஹக்ஞானம்"*

நாபிச் சக்கரத்தில் சஞ்யமம் செய்தால் சரீரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

16 அரங்கள் (கோடுகள்) கொண்ட நாபிச்சக்கரம் சரீரத்தின் நடுவில் உள்ளது. எல்லாப் பகுதிகளிலும் பரவி இருக்கும் நாடி நரம்புகளின் விசேஷ ஸ்தானம் இது.

ஆதலால் இதில் சஞ்யமம் செய்தால் சரீரத்தில் இருக்கும் வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களும் தோல், ரத்தம், மாமிசம், நாடி, நரம்பு, எலும்பு, மஜ்ஜை, வீரியம் ஆகிய ஏழு தாதுக்களின் இருப்பை முழுமையாக அறிந்து கொள்ளலாம்.

**சூத்திரம் 30 :** *"கண்டகூபே க்ஷீத்பிபாஸாநிவ்ருத்தி"*

தொண்டைக் குழியில் சஞ்யமம் செய்தால் பசி, தாகத்தை வெல்லலாம்.

நாவின் அடியில் நூல் போல ஒரு நரம்பு உள்ளது. அதன் அடியில் தொண்டை உள்ளது.அந்த தொண்டைக்குக் கீழே தொண்டைக்குழி உள்ளது. அதை கண்டகூபம் என்று கூறுகிறார்கள்.

அந்த ஸ்தானத்தில் பிராணாதி வாயுக்களின் ஸ்பரிசம் ஏற்படும்போது மனிதனுக்கு பசி தாகம் எடுக்கிறது. ஆதலால் கண்டகூபத்தில் சஞ்யமம் செய்தால் பிராணாதிகளின் ஸ்பரிசம் ஏற்படாது. அதன் விளைவால் யோகிக்குப் பசி, தாகம் எடுக்காது.


**சூத்திரம் 31 :** *"கூர்ம நாட்யாம் ஸ்தைர்யம்"*

தொண்டைக்குழிக்கு கீழே மார்பில் ஆமை வடிவம் கொண்ட ஒரு நாடி இருக்கின்றது. அதை கூர்ம நாடி என்பர். அந்த கூர்ம நாடியில் சஞ்யமம் செய்தால் யோகி அதிக ஸ்திரத்தன்மையுடன் இருப்பான்.

பாம்பு புற்றுக்குள் பாதி நுழைந்து விட்டால் அதை இழுப்பது மிகக் கடினம்.பலம் கொண்டு இழுத்தாலும் நன்கு ஸ்திரத்தன்மையுடன் இருக்கும். உடும்பு சுவரை மிகப் பலம் கொண்டு பிடித்துக் கொள்ளும். அதன் ஸ்திரத்தன்மை மிக வலிமை ஆனது.

சூத்திரம் தொடரும்....

# குறுக்கெழுத்துப் புதிர் -103



**இடமிருந்து வலம்**

1. வலது கையில் சங்கும், இடது கையில் சக்கரமும் ஏந்தியபடி உள்ள மகா விஷ்ணு தலம்...(7)
8. பஞ்ச பூதங்களில் ஒன்று...(2)
11. வைஷ்ணவத்தைப் பற்றி அறிய மடங்களை நிறுவியவர்....(6)
12. தமிழ் நாட்டில் இரண்டாவது பெரிய கோபுரம்...(8)
15. அமிர்தம் கிடைக்க கடைந்தது...(5)
18. விபூதியைப் பிரசாதமாக வழங்கும் பெருமாள் கோயில்...(6)
19. பகவான் ஐந்து ரிஷிகளுக்கு ஐந்து ராத்திரியில் உபதேசித்தது.....(10)
20. பெரியாழ்வார் இயற்றியது....(8)

**வலமிருந்து இடம்**

02. வைணவத் தலங்களில் குரு கிரகத்திற்கான தலம்...(6)
08. இராமபிரானால் கொல்லப்பட்ட வானர வீரன்...(2)
14. சதுர்புஜ கருடர் உள்ள தலம்...(7)
16. கழுகு இனத்தில் ராஜாவாக ராமாயணத்தில் அறியப்படுவது...(3)
21. அனைத்தும் கிடைக்க கருடனை வணங்க வேண்டிய கிழமை...(4)

**மேலிருந்து கீழ்**

1. ராமரும், லட்சுமணனும் தன் தந்தைக்கு முன்னோர் வழிபாட்டை நடத்திய இடம்...(5)
2. பீமன் மன அமைதி வேண்டி வழிபட்ட மகாவிஷ்ணு கோயில்...(7)
3. கஜேந்திரனை காக்க பெருமாளிடம் இருந்து வந்தது...(6)
4. பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் பெரிய கண்களுடன் இருப்பவர்....(4)
5. பூமித்தாயைத் தன் மடியில் தாங்கி காட்சி கொடுப்பவர்...(7)
6. நரசிம்மர்...(4) கிரகத்திற்கு அதிபதி
7. பிதாமகர்...(4)

**தொகுப்பு : திரு.எஸ். இராஜகுமார், கொளத்தூர்.**

புதிருக்கு விடை அறிய 42ம் பக்கம் பார்க்கவும்...

**கீழிருந்து மேல்**

09. கோலாசுரனை சிங்க வாகனத்தில் எழுந்தருளி லக்ஷ்மி வதம் செய்த பின் பெயர் மாறிய ஊர்...(5)
10. ராம நாமத்தை கோடி முறை எழுதுவதை...(4)என்பர்.
17. வராக முக ஆஞ்சநேயர் உள்ள தலம்...(4)
20. ஆண்டாள் இயற்றியது...(5)
21. 50 அடி கல்தூண் மீது பறக்கும் நிலையில் தங்கக் கவசத்துடன் கருடாழ்வார் காட்சியளிக்கும் தலம்...(5)
22. வைகை ஆற்றில் இறங்கும் கள்ளழகருக்கு...(4) சூடிய மாலைதான் சாத்தப்படும்

திருமலை திவ்ய திருத்தலத்தில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அதே போன்று அனைவரையும் "கோவிந்தா" என்றே அழைத்திடுங்கள்.





மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

சக்கர ராஜன் வேங்கடாத்திரியைச் சுற்றி இருந்த அசுரர்கள் யாவரையும் அழித்தார், இதனால் அப்பகுதியில் இருந்த மக்கள் யாவரும் மகிழ்ச்சியுற்றனர். தேவர்களும் சக்கர ராஜாவைக் கண்டு மகிழ்வுற்றனர். பின்னர் தேவர்கள் சுதர்சன ராஜனிடம் ஆவேசத்தை விடுத்து திருவேங்கடவனைச் சென்று அடைந்திடும்படி கோரினர் என்று நாம் கடந்த இதழ் வரை சுதர்சன ராஜனின் வீர பராக்கிர மங்களை வாசித்தோம். இனி...

சுதர்ஸனருக்குத் தேவர்கள் கூறிய அறிவுரையை மறுக்க மனமில்லை. இருந்தாலும், அவருக்கு மனதில் குறை ஒன்று இருந்தது. பகைவர்களை அழிக்கும் பணியில் என்னுடன் வந்த வீரர்கள் பலர் உயிர் இழந்து விட்டனர். அவர்கள் இல்லாமல் தான் மட்டும் வேங்கட கிரிக்குச் செல்வது என்பது சரியல்ல. எனவே அவர் தன் யோக சக்தியினால் போரில் உயிர் இழந்த தன் வீரர்களை மீண்டும் உயிர் பெற்று எழும்படி செய்தார்.

அதன்பிறகு, வேங்கடாத்ரிக்கு அனைத்து சேனைக ளோடுச் சென்றார் என சூத மகரிஷி கூறினார். அதைக் கேட்டு சௌனகாதி முனிவர்கள், சுவாமி! க்ருத, திரேதா, துவாபர யுகங்களில் ஸ்வாமியின் லீலைகளை வருணித்தீர்கள். கலியுகத்தில் ஸ்வாமி எப்படி தன் லீலைகளை வெளிப்படுத்தினார் என்பதை எங்களுக்குத் தாங்கள் கூற வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டனர்.

முனிவர்களே! உங்களுடைய விருப்பத்தை நான் புரிந்து கொண்டேன். திருவேங்கடவனின் லீலைகள் பல பல. வேங்கடாத்ரி மலைப்பகுதியைச் சுற்றிலும் இருந்த அசுரர்களை அழித்த பின்பு ஸ்வாமி இந்த பூதலத்திலேயே இருக்க வேண்டும் என எண்ணினார்.

அதன்படி ஸ்வாமி தன்னை அர்ச்சாமூர்த்தியாக இருக்கும்படி செய்து கொண்டு எல்லோராலும் கலியுகக் கடவுள் இவர்தான் என்று பேசும்படியாக நிலைப்பெற்று நின்றார். மௌன முத்திரை தரித்தார். கர்ம நேத்தி ரங்களுக்குத் தவிர வேறு எவருக்கும் புலனாகாதபடி பார்த்துக் கொண்டார். பக்தர்களுக்கு நேரடியாகக் காட்சி அளிக்காமல் கனவில் தோன்றி அவர்தம் கடமைகளைச் செய்யுமாறு போதித்தார். மாய வடிவனாகி மக்களிடத்தில் தன் மீது பக்தி மயக்கம் உண்டாகும்படி செய்கின்றார். மேலும் பக்தர்களில் யாரொருவர் உலக ஆசைகளில் இருந்து விலகி, உடலாசைகளையும் துறந்து ஒரு மனதாகி அவரை வணங்குகிறார்களோ அவர்களுக்கு மோட்சத்தை அளிக்கின்றார்.

சில சமயங்களில் வைகுண்டவாசியாகக் காட்சி அளிப்பார். சிறிது நேரத்திற்குள் மறைந்து விடுவார். ஒரு சில நேரங்களில் ஆனந்த நிலைய மூர்த்தியாகக் காட்சி கொடுப்பார். சில வேளைகளில் அந்தர்யாமியாகவும் இருப்பார். சாமான்ய மக்கள் அன்போடு செய்கின்ற பூஜைகளை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்கிறார். மேலும், பக்தியோடு அவர்கள் கேட்கும் கோரிக்கைகளை

நூல் மதிப்புரை




**நூலின் பெயர்** - அருணாசலக் கவிராயரின் அநுமார் பிள்ளைத் தமிழ்

**பதிப்பாசிரியர்** - பூசை.ச.அருணவசந்தன்

**கிடைக்குமிடம்** - சிவசுந்தரி கலைக் கூடம், எண்.29, பீமண்ணமுதலி கார்டன் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018

**விலை** - ரூ.200/-, 99411 24964

இது அனுமன் மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் நூலாகும். இதைப் பாடியவர் இசை உலகில் புகழ் பெற்ற இராமாயண கீர்த்தங்களைப் பாடிய ஸ்ரீஅருணாசலக் கவிராயர் ஆவார். இவர் தமிழ் மொழியில் கீர்த்தனை முறையைத் தோற்றுவித்த தமிழிசை மூவர்களில் முதன்மை பெற்றவர். அவர் இந்நூலில் அனுமனின் வீர, தீரச் செயல்கள், அதீத நுணுக்கமான அறிவுத்திறன், அதிகுணங்கள் போன்றவற்றை விரிவாகக் காட்டியுள்ளார்.

கம்பராமாயணம், நாட்டுப்புறக்கதைகள், கூத்துக்கலைப்பாடல்கள், பழங்கதைகள், மயில் இராவணனின் கதை போன்றவற்றிலிருந்து திரட்டிய அற்புதமான அனுமனின் வீர, தீரச் செயல்களைத் தொகுத்து எளிய இனிய தமிழில் பாடியுள்ளார்..

ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னதாகப் பாடப்பட்ட இந்நூல் 1889ஆம் ஆண்டு அச்சு வாகனம் ஏறி சிறிய நூலாகப் பதிக்கப்பட்டுள்ளது. பிறகு இது பதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வகையில் 135 ஆண்டுகளுக்குப் பிறகு சிவசுந்தரி கலைக்கூடம் வழியாக ஸ்ரீமுத்து செட்டியார் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு.நாராயணசுவாமி அவர்களின் நல்லாதரவுடன் பூசை.ச. அருண வசந்தாவின் மொழிப்புரையுடன் வெளிவருகிறது.

இது சிறந்த ஓசை நயத்துடன், துள்ளல் நயனத்துடன் அனுமனின் பெருமைகளை விளக்கும் நூலாக இருக்கிறது. அனுமனின் பால லீலைகள், அவர் சூரியனிடம் கல்வி பயின்றது, இராமனைக் கண்டு சேவகன் ஆனது, இராவணனுக்கு அறிவுரை வழங்கியது, இலங்கையை எரித்து அவனை ஆகாயத்தில் அலையவிட்டது, பஞ்ச முகம் கொண்டு மயில்ராவணனை அழித்தது, தனது வாலால் கோட்டை கட்டி இராமர், லக்ஷ்மணர், சீதையைக் காத்தது, கடல் தாண்டியது, விஸ்வ ரூபம் காட்டியது, அத்தி மரத்திற்கு அருள் புரிந்தது, அனுமன் நீலமேகனை பாதாள இலங்கைக்கு அரசன் ஆக்கியது, சீதையிடம் முத்துமாலை பரிசு பெற்றது போன்ற அநேக செய்திகள் இந்நூலில் கண்டு மகிழலாம்.

**-திரு.கே.செந்தில்வாணன், சென்னை.**

நிறைவேற்றுகிறார். அவர்கள் பக்தியோடு கொடுக்கும் காணிக்கைகள் சிறிதாக இருந்தாலும் பெரிதாக எண்ணி ஏற்றுக் கொள்வார். சாமான்யர் செய்யும் பூஜைகளில் மனம் மகிழ்ந்து போவார். தெய்வ சக்தியாக இருந்தும் சாதாரணமாக மனிதர்களைப் போலவே நம்மிடையே இருந்து, நம் மனதில் பக்தி மயக்கத்தை உண்டாக்கி தன்னிடம் வரும் படி மக்கள் உள்ளங்களில் விருப்பத்தை உண்டு பண்ணுகிறார்.

திருமலையில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் பங்கேற்று தொண்டாற்றும் பக்தர்களுக்கு சகல விதமான பாக்கியங்களையும் நல்குகிறார். விழாக் காலங்களில் தேவர்கள் அனைவரும் பூலோகத்திற்கு வந்து ஸ்வாமி புஷ்கரணியில் நீராடுவர். தேவர்கள் தரும் உணவுகளை மிகவும் விருப்பமோடு பெற்று மகிழ்வார். இவை அனைத்தும் மறைமுகமாக நடந்தேறும் ஸ்வாமி செய்யும் வினோதங்களேயாகும்.

ஆனந்த நிலையத்தில் ஸ்வாமி சிலை வடிவத்தில் காட்சி கொடுக்கிறார். மேலும், திருமலைக்கு வர இயலாதவர்கள் மலை உள்ள திசையை நோக்கி வணங்கி நின்றாலே போதும் ஸ்வாமி அவர்களுக்கும் அருள் தருவார். தன் மீது பக்தியுள்ளவர்களை தவறாமல் காக்கும் கலியுக தெய்வம் அவர். இக்காரணங்களால் தேவர்களும் கூட பூலோகத்தில் ஏதோ ஒரு வடிவில் வந்து வாழ வேண்டும் என விரும்புகிறார்கள்.

க்ருத, திரேத, த்வாபர யுகங்களில் ஸ்வாமி அருள் பெறுவது மிகவும் அரிது. ஆனால் கலியுகத்தில் ஒரு முகூர்த்த காலம் இறைவனை பிரார்த்தித்தால் போதும் காட்சி கொடுப்பார். திருவேங்கடவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் வேறொன்றும் இல்லை. க்ருத, த்ரேத, த்வாபர யுகங்களில் வேங்கடாத்ரி பொன் மலையாக விளங்கியது. கலியுகத்தில் கல்மலையாகக் காட்சிக் கொடுக்கிறது.

இவ்வாறாக எத்தனையோ மகிமைகளும், அதிசயங்களும் நிறைந்தது வேங்கடாத்ரி. ஸ்ரீநிவாசனை வேற்று மதத்தினரும் கூட வணங்குகிறார்கள். ஸ்வாமி மீது வைத்துள்ள பக்தியின் காரணமாக அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறுகின்றன.

கலியுகத்தில் மக்களுக்கு ஆன்மீகச் சிந்தனை மிகவும் குறைவு. இவர்களில் பெரும்பாலோர் பொருள் மீது ஆசை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

மேலும் நல்லவர்களின் தொடர்பைக் காட்டிலும், தீயவர்கள் தொடர்பையே மிகவும் விரும்புபவர்களாகவும் உள்ளனர். உண்மையில் இவர்களும் வேற்று எண்ணங்களை கைவிட்டு ஒரு மனதாக இறைவனைச் சேவித்தால் முக்தி அவர்கள் கைவசமாகும்.


ஸ்ரீநிவாசனின் கிருபைக்கு வைஷ்ணவ தர்மம் ஒன்றே சரண்யமாகும். வராஹ ஸ்வாமி பூதேவி தாயாருக்குச் சொல்லிய மறை பொருளும் வைணவ தர்மமே ஆகும்.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

பெருமை அறிவோம்...

# வாழ்வியல் நெறிகள்

## ஆட்டுவிப்பவன் ஒருவன்



*ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் இங்கு ஒன்றோடு ஒன்றை*
*மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும் முயன்றவினை*
*காட்டுவிப்பானும், இருவினைப்பாசக் கயிற்றின் வழி*
*ஆட்டுவிப்பானும் ஒருவன் உண்டே தில்லை அம்பலத்தே!*

– பட்டினத்தார்

பொருள் : நெஞ்சே! எல்லா உயிர்களையும் உண்பிக்கின்றவனும், உறங்கப் பண்ணுபவனும், ஒரு பொருளோடு மற்றொரு பொருளை இசைவிக்கின்றவனும், அவற்றைத் தொழிற்படுத்துபவனும், அவ்வாறு தொழிற்படுத்திய பயனைக் காண்பிக்கின்றவனும், நல்வினை தீவினையென்னும் பாசக்கயிற்றின் வழியாக ஆட்டுவிக்கின்றவனும் தில்லைச் சிதம்பரத்திலே உள்ள முதல்வனாகிய நடராஜப் பெருமான் என்பதை உணர்ந்து கொள்!

**வாழ்வியலுக்கான கருத்து** : “அவனன்றி ஓரணுவும் அசையாது” என்பதும், “ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே” என்பதும் நாம் அறிய வேண்டிய அருமை அல்லவா? “எல்லாம் இறைவன் செயல்” என்று வாழ்க்கையை நன்றென்று வாழ்தல் வேண்டும்.

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***



# ஸ்ரீசரஸ்வதி தேவி பூஜை முறை

கல்விக் கடவுள், லௌகீக, அலௌகீக கல்விக்கு சரஸ்வதி தேவியே முதன்மையானவள். மாக (மாசி) மாதம் சுத்த பஞ்சமி அன்று சரஸ்வதி தேவி அவதரித்தாள். வசந்த பஞ்சமி அன்று சரஸ்வதி தேவியை வழிபட்டால் சிறந்த கல்விமானாக விளங்கிடுவர் என்பது நம்பிக்கை. வாசகர்கள் குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள் பயன்பெறும்படி வசந்த பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு காணிக்கையாக "ஸப்தகிரி" மாத இதழ் சரஸ்வதி தேவி வழிபாட்டு முறையை வழங்குகின்றது.

## சங்கல்பம்

ஸ்ரீமஹா விஷ்ணோராஜ்ஞயா ப்ரவர்தமானஸ்ய அத்ய ப்ரஹ்மண: த்விதீய பரார்த்தே ஸ்வேதவராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, கலியுகே ப்ரதம பாதே ஜம்பூத்வீபே பரத வர்ஷே பரத கண்டே அஸ்மின் வர்தமான வ்யவஹாரிக சாந்த்ரமானேன ஸ்வஸ்தி ஸ்ரீ ... நாம சம்வத்ஸரே .... அயனே .... ருதௌ ... மாஸே ... பக்ஷே ... திதௌ .. வாஸரே சுபயோக சுபநக்ஷத்ர ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் சுபதிதௌ மம (அஸ்மாகம் ஸஹ குடும்பானாம்) சதுர்வித புருஷார்த சித்த்யர்தம் சகல வித்யாபாரங்கத்த்வர்தம் ஸ்ரீசரஸ்வதி தேவதா முத்திஸ்ய ஸ்ரீசரஸ்வதீ தேவதா ப்ரீத்யர்தம் கல்போக்த ப்ரகாரேண யாவச்சக்தி த்யானா வாகனாதி ஷோடசோபசார பூஜாம் கரிஷ்யே:

ததங்கத்வேன கலசாராதனம் கரிஷ்யே கலசம் கந்த, பத்ர, புஷ்ப, அக்ஷதை: அப்யர்ச்ய:

கலசம் மீது கரம் வைத்து...

கலசஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ர: ஸமாச்ரிதா:
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா:
ஸ்ம்ருதா: குக்ஷௌது சாகரா: ஸர்வே ஸப்த த்வீ போ வஸுந்தரா,
ருக்வேதோ ऽத யஜுர்வேத: ஸாமவேதோஹ்யதர்வண:
அங்கைச்ச ஸஹிதாஸ்ஸர்வே கலசாம்பு ஸமாச்ரிதா:
கலசோதகேன தேவம் ஆத்மானம் பூஜாத்ரவ்யாணி சம்ப்ரோக்ஷ்ய:...

என்று கூறி புஷ்பத்தால் தெய்வத்தின் மீதும், பூஜை திரவியங்கள் மீதும், தம் தலை மீதும் தெளித்தல் வேண்டும்.

## தியானம்

புஸ்தகே து யதோதேவி க்ரீடதே பரமார்தத:
தத்ர தத்ர ப்ரகுர்வீத த்யானமாவாஹநாதிகம்
த்யானமேவம் ப்ரகுர்வீத சாதகோ விஜிதேந்த்ரிய:
ப்ரணவாஸனமாரூடாம் ததர்தத்வேன நிச்சிதாம்
அங்குசம் சாக்ஷசூத்ரம் ச பாசம் வீணாம் ச தாரிணீம்
முக்தாஹார சமாயுக்தாம் மோதரூபாம் மனோஹராம்
க்ருதேன தர்பணாப்யேன வஸ்த்ரே ணோபரிபூஷிதாம்
சுஸ்தனீம் வேதவேத்யாம் ச சந்த்ரார்த்த க்ருதசேகராம்
ஜடாகலாபஸம்யுக்தாம் பூர்ண சந்த்ரநிபானனாம்
த்ரிலோசனாம் மஹாதேவீம் ஸ்வர்ண னூபுரதாரிணீம்
கடகைஸ்வர்ண ரத்னாத்யைர்முக்தாம் வலயபூஷிதாம்
கம்புகண்டீம் சுதாம்ரோஷ்டீம் ஸர்வாபரணபூஷிதாம்
கேயூரைர்மேகலாத்யைச்ச த்யோதயந்தீம் ஜகத்ரையீம்
சப்தப்ரஹ்மாத்மிகாம் தேவீம் த்யானகர்ம ஸமாஹித:

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: தியாயாமி.

## ஆவாஹனம்

அத்ராகச்ச ஜகத்வந்த்யே சர்வலோகைகபூஜிதே
மயாக்ருதமிமாம் பூஜாம் க்ருஹாண ஜகதீஸ்வரீ

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ஆவாஹயாமி.

## சிம்ஹாசனம்

ஆவாஹிதா பவ, ஸ்தாபிதா பவ, சன்னிஹிதா பவ, சன்னிருத்தா பவ, அவகுண்டிதா பவ, சுப்ரீதா பவ, சுப்ரசன்னா பவ, சுமுகீ பவ, வரதா பவ, ப்ரசீத ப்ரசீத கனகமய விதர்திஸ்தாபிதே தூலிகாட்யே விவித குசுமகீர்ணே கோடி பாலார்கவர்ணே, பகவதி ரமணீயே ரத்ன சிங்ஹாசனேஅஸ்மின் உபவிச பதயுக்மம் ஹேமபீடே நிதாய

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: நவரத்ன கசித சுவர்ண சிங்ஹாசனம் சமர்பயாமி.

## பாத்யம்

கந்தபுஷ்பாக்ஷதஸ்ஸார்தம் சுத்ததோயேன ஸம்யுதம்
சுத்தஸ்படிகதுல்யாங்கீம் பாத்யம் தே ப்ரதிக்ருஹ்யதாம்

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம், ஸ்ரீசரஸ்வத்யை நம: பாத்யம் சமர்பயாமி

## அர்க்யம்

பக்தாபீஷ்டப்ரதே தேவி தேவதேவாதி வந்திதே
தாத்ருப்ரியே ஜகத்தாத்ரி ததாம்யர்க்யம் க்ருஹாண மே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீ சரஸ்வத்யை நம: அர்க்யம் சமர்பயாமி

**ஆசமனம்**

பூர்ணசந்த்ர சமாநாபே கோடிசூர்யசமப்ரபே
பக்த்யா சமர்பிதம் வாணி க்ருஹாணாசமநீயகம்

சாங்காம் சாயுதாம் சவாஹானாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ஆசமநீயம் சமர்பயாமி

**மதுபர்கம்**

கமலபுவனஜாயே கோடி சூர்ய ப்ரகாசே
விசத சுசி விலாசே கோமலே ஹாரயுக்தே
ததி மதுக்ருதயுக்தம் க்ஷீரரம்பாபலாத்யம்
சுருசிர மதுபர்கம் க்ருஹ்யதாம் தேவவந்த்யே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: மதுபர்கம் சமர்பயாமி

**பஞ்சாம்ருதம்**

ததிக்ஷீரக் ருதோபேதம் சர்கராமதுசம்யுதம்
பஞ்சாம்ருதஸ்னானமிதம் ஸ்வீகுருஷ்ய மஹேஸ்வரி

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: பஞ்சாம்ருதஸ்நானம் சமர்பயாமி

**சுத்தோதக ஸ்நானம்**

சுத்தோதகேன சுஸ்னானம் கர்தவ்யம் விதிபூர்வகம்
சுவர்ணகலசாநீதை: நாநாகந்தசுவாஸிதை:

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: சுத்தோதகஸ்நானம் சமர்பயாமி

**வஸ்த்ரயுக்மம்**

சுக்ல வஸ்த்ரத்வயம் தேவி கோமலம் குடிலாலகே
மயி ப்ரீத்யா த்வயா வாணி ப்ரஹ்மாணி ப்ரதிக்ருஹ்யதாம்

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: வஸ்த்ரயுக்மம் சமர்பயாமி

**யஜ்ஞோபவீதம்**

சப்தப்ரஹ்மாத்மிகே தேவி சப்தசாஸ்த்ரக்ருதாலயே
ப்ரஹ்மசூத்ரம் க்ருஹாண த்வம் ப்ரஹ்மசக்ராதி பூஜிதே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: யக்ஞோபவீதம் சமர்பயாமி

**ஆபரணம்**

கடகமகுடஹாரைர்னுபுரைரங்கதாத்யை:
விவிதஸுமணியுக்தை மேகலாரத்னஹாரை:
கமலதளவிலாஸே காமதே ஸங்க்ருஹீஷ்வ
ப்ரகடித கருணார்த்தோ பூரிஷோ பூஷனானி

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ஆபரணானி சமர்பயாமி

**கந்தம்**

சந்தநாகரு கஸ்தூரீ கர்பூரைச்ச ஸுஸம்யுதம்
கந்தம் கிருஹாண வரதே விதிபத்னி! நமோ ടஸ்துதே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: கந்தம் சமர்பயாமி

**அக்ஷதை**

அக்ஷதான் தவளான் திவ்யான் சாலீதண்டுல நிர்மிதான்
க்ருஹாண வரதே தேவி ப்ரஹ்மசக்தி சுபாக்ஷதான்

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: அக்ஷதான் சமர்பயாமி

**புஷ்பம்**

நந்யாவர்தாதி புஷ்பைச்ச மல்லிகாபிர்மனோஹரை:
கரவீரசுமை: ரம்யைர்வகுளை: கேதகை: சுபை:
புன்னாகைர்ஜாதிகுசுமைர்மந்தாரைச்ச சுசோபிதை:
நீலோத்பலை: சுபைச்சான்யை: தத்கால தருசம்பவை:
கல்பிதானி ச மால்யானி க்ருஹாணாமர வந்திதே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: புஷ்பை: பூஜையாமி

**அங்க பூஜை**

| | |
|---|---|
| ஸ்ரீப்ரஹ்மண்யை நம: | பாதௌ பூஜயாமி |
| ஸ்ரீபாரத்யை நம: | குல்பௌ பூஜயாமி |
| ஸ்ரீஜகத்ஸ்வரூபிண்யை நம: | ஜங்கே பூஜயாமி |
| ஸ்ரீஜகதாத்யை நம: | ஜானுனீ பூஜயாமி |
| ஸ்ரீசாருவிலாஸின்யை நம: | ஊரூன் பூஜயாமி |
| ஸ்ரீகமலபூம்யை நம: | கடிம் பூஜயாமி |
| ஸ்ரீஜன்மஹீனாயை நம: | ஜகனம் பூஜயாமி |
| ஸ்ரீகம்பீரநாபயே நம: | நாபிம் பூஜயாமி |
| ஸ்ரீஹரிபூஜ்யாயை நம: | உதரம் பூஜயாமி |
| ஸ்ரீலோகமாத்ரே நம: | ஸ்தனௌ பூஜயாமி |
| ஸ்ரீவிசாலவக்ஷசே நம: | வக்ஷ:ஸ்தலம் பூஜயாமி |
| ஸ்ரீகானவிசக்ஷணாயை நம: | கண்டம் பூஜயாமி |
| ஸ்ரீஸ்கந்த ப்ரபூஜ்யாயை நம: | ஸ்கந்தௌ பூஜயாமி |
| ஸ்ரீகனபாஹவே நம: | பாஹூன் பூஜயாமி |
| ஸ்ரீபுஸ்தகதாரிண்யை நம: | ஹஸ்தௌ பூஜயாமி |
| ஸ்ரீச்ரோத்ரிய பாந்தவே நம: | ச்ரோத்ரம் பூஜயாமி |
| ஸ்ரீவேதஸ்வரூபாயை நம: | வக்த்ரம் பூஜயாமி |
| ஸ்ரீசுநாஸின்யை நம: | நாஸிகாம் பூஜயாமி |
| ஸ்ரீபிந்துஸமாநோஷ்ட்யை நம: | ஓஷ்டௌ பூஜயாமி |
| ஸ்ரீகமலலோசனாயை நம: | நேத்ரௌ பூஜயாமி |
| ஸ்ரீதிலகதாரிண்யை நம: | பாலம் பூஜயாமி |
| ஸ்ரீசந்த்ரமூர்த்யை நம: | சக்ஷீன் பூஜயாமி |
| ஸ்ரீசர்வப்ரதாயை நம: | முகம் பூஜயாமி |
| ஸ்ரீசரஸ்வத்யை நம: | சிர: பூஜயாமி |
| ஸ்ரீப்ரஹ்மரூபிண்யை நம: | சர்வாண்யங்கானி பூஜயாமி |

# ஸ்ரீசரஸ்வதி அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் சரஸ்வத்யை நம:
ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் மஹாமாயாயை நம:
ஓம் வரப்ரதாயை நம:
ஓம் ஸ்ரீப்ரதாயை நம:
ஓம் பத்மநிலயாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மவக்த்ராயை நம:
ஓம் சிவாநுஜாயை நம:
ஓம் புஸ்தகத்ருதே நம: (10)
ஓம் ஞானஸமுத்ராயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பராயை நம:
ஓம் காமரூபாயை நம:
ஓம் மஹாவித்யாயை நம:
ஓம் மஹாபாதக நாசின்யை நம:
ஓம் மஹாச்ரயாயை நம:
ஓம் மஹாபோகாயை நம:
ஓம் மஹாபுஜாயை நம:
ஓம் மஹாபாக்யாயை நம: (20)
ஓம் மஹோத்ஸாஹாயை நம:
ஓம் திவ்யாங்காயை நம:
ஓம் ஸுரவந்திதாயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் மஹாபாசாயை நம:
ஓம் மஹாகாராயை நம:
ஓம் மஹாங்குசாயை நம:
ஓம் சீதாயை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விஸ்வாயை நம: (30)
ஓம் வித்யுந்மாலாயை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் சந்த்ரிகாயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சந்த்ரலேகா விபூஷிதாயை நம:
ஓம் சாவித்ர்யை நம:
ஓம் ஸுரஸாயை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் திவ்யாலங்கார பூஷிதாயை நம:
ஓம் வாக்தேவ்யை நம: (40)
ஓம் வஸுதாயை நம:
ஓம் தீவ்ராயை நம:
ஓம் மஹாபத்ராயை நம:
ஓம் மஹாபலாயை நம:
ஓம் போகதாயை நம:
ஓம் பாரத்யை நம:
ஓம் பாமாயை நம:
ஓம் கோவிந்தாயை நம:
ஓம் கோமத்யை நம:
ஓம் சிவாயை நம: (50)
ஓம் ஜடிலாயை நம:
ஓம் விந்த்யவாஸாயை நம:
ஓம் விந்த்யாசல விராஜிதாயை நம:
ஓம் சண்டிகாயை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் ப்ராஹ்ம்யை நம:
ஓம் ப்ரஹ்மஜ்ஞானைகஸாதநாயை நம:
ஓம் ஸௌதாமிந்யை நம:
ஓம் ஸுதாமூர்த்யை நம:
ஓம் ஸுபத்ராயை நம: (60)
ஓம் ஸுரபூஜிதாயை நம:
ஓம் ஸுவாஸிந்யை நம:
ஓம் ஸுநாஸாயை நம:
ஓம் விநித்ராயை நம:
ஓம் பத்மலோசநாயை நம:
ஓம் வித்யாரூபாயை நம:
ஓம் விசாலாக்ஷ்யை நம:
ஓம் ப்ரஹ்மஜாயாயை நம:
ஓம் மஹாபலாயை நம:
ஓம் த்ரயீமூர்த்யை நம: (70)
ஓம் த்ரிகாலஜ்ஞாயை நம:
ஓம் த்ரிகுணாயை நம:
ஓம் சாஸ்த்ர ரூபிண்யை நம:
ஓம் சும்பாஸுரப்ரமதிந்யை நம:
ஓம் ஸுபதாயை நம:
ஓம் ஸர்வாத்மிகாயை நம:
ஓம் ரக்த ஜநிஹந்த்ர்யை நம:
ஓம் சாமுண்டாயை நம:
ஓம் அம்பிகாயை நம:
ஓம் மாலின்யை நம: (80)
ஓம் முண்டகப்ரஹரணாயை நம:
ஓம் தும்ரலோசந மர்தநாயை நம:
ஓம் ஸர்வதேவஸ்துதாயை நம:
ஓம் ஸௌம்யாயை நம:
ஓம் ஸுராஸுர நமஸ்க்ருதாயை நம:
ஓம் காளராத்ர்யை நம:
ஓம் கலாதாராயை நம:
ஓம் ரூபஸௌபாக்ய தாயிந்யை நம:
ஓம் வாக்தேவ்யை நம:
ஓம் வராரோஹாயை நம: (90)
ஓம் வாராஹ்யை நம:
ஓம் வாரிஜாஸநாயை நம:
ஓம் சித்ராம்பராயை நம:
ஓம் சித்ரகந்தாயை நம:
ஓம் சித்ரமால்ய விபூஷிதாயை நம:
ஓம் காந்தாயை நம:
ஓம் காமப்ரதாயை நம:
ஓம் வந்த்யாயை நம:
ஓம் வித்யாதர ஸுபூஜிதாயை நம:
ஓம் ஸ்வேதாநநாயை நம: (100)
ஓம் நீலபுஜாயை நம:
ஓம் சதுர்வர்க பலப்ரதாத்ரே நம:
ஓம் சதுராநநஸாம்ராஜ்யாயை நம:
ஓம் ரக்தமத்யாயை நம:
ஓம் நிரஞ்ஜநாயை நம:
ஓம் ஹம்ஸாஸநாயை நம:
ஓம் நீலஜங்கையை நம:
ஓம் ப்ரம்ஹவிஷ்ணு சிவாத்மிகாயை நம: (108)

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர
பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம:
அஷ்டோத்தர சதநாமபூஜாம் சமர்பயாமி

**தூபம்**

தசாங்கம் குக்குலோபேதம் சுகந்தம் சுமனோஹரம்
தூபம்க்ருஹாண தேவேசி சர்வதேவ நமஸ்க்ருதே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: தூபமாக்ராபயாமி

**தீபம்**

க்ருதாக்தவர்தி சம்யுக்தம் தீபிதம் தீபமம்பிகே
க்ருஹாண சித்ஸ்வரூபே த்வம் கமலாசநவல்லபே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: சாக்ஷாத் தீபம் தர்ஸயாமி

**நைவேத்யம்**

அபூபான் விவிதான் ஸ்வாதுன் சாலிபிஷ்டோபபாசிதான்
ம்ருதுலான் குடசம்மிச்ரான் ஸஜீரக மரீசிகான்
கதளீ பணஸாம்ராணாம் பக்வாநீஷு பலானி ச
கந்தமூலம் வ்யஞ்ஜனாதி சோபதம்சம் மனோகரம்
அன்னம் சதுர்விதோபேதம் க்ஷீரான்னம் ச க்ருதம் ததி
சீதோதகம் ச சுஸ்வாது கற்பூரைலாதி வாஸிதம்
பக்ஷ்யபோஜ்யசமாயுக்தம் நைவேத்யம் ப்ரதிக்ருஹ்யதாம்

சரஸ்வதி தேவிக்கு பால், பாயசம், அன்னம், பழங்கள் நிவேதனம் செய்து இவற்றின் மீது வெற்றிலைப் பாக்கினால் நீரினை தெளித்து... **"ஓம் பூர்சுவ: ஸுவ:"** என்று மந்திரம் கூறி...அனயாத்யான ஆவாஹனாதி சோடசோபசார பூஜயாச சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: நைவேத்யம் சமர்பயாமி.

மத்யே மத்யே பானீயம் சமர்பயாமி.
உத்தராபோசனம் சமர்பயாமி.
ஹஸ்தௌ ப்ரக்ஷாளயாமி, பாதௌ ப்ரக்ஷாளயாமி
சுத்தாசமனீயம் சமர்பயாமி

**தாம்பூலம்**

தாம்பூலம் ச ஸகற்பூரம் புன்னாகதளைர்யுதம்
க்ருஹாண தேவதேவேசி தத்த்வரூபே நமோ ஽ஸ்துதே

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: தாம்பூலம் சமர்பயாமி

**நீராஜனம்**

நீராஜனம் க்ருஹாண த்வம் ஜகதானந்ததாயினி
ஜகத்திமிர மார்தாண்ட மண்டலே தே நமோ நம:

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ஆனந்த கற்பூர நீராஜனம் சமர்பயாமி

**புஷ்பாஞ்சலி**

சாரதே லோக மாதஸ்த்வ மாச்ரிதாபீஷ்டதாயினீ
புஷ்பாஞ்சலிம் க்ருஹாண த்வம் மயாபக்த்யா சமர்பிதம்
யா குந்தேந்து துஷாரஹார தவளா யா சுப்ரவஸ்த்ரான்விதா
யா வீணா வரதண்ட மண்டித கரா யா ச்வேத பத்மாஸனா
யா ப்ரஹ்மாச்யுத சங்கர ப்ரப்ருதிபி: தேவை: சதாபூஜிதா
ஸா மாம் பாது சரஸ்வதி பகவதி நிச்சேஷ ஜாட்யாபஹா

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: மந்த்ரபுஷ்பம் சமர்பயாமி

**பிரதக்ஷிணை**

பாஹி பாஹி ஜகத்வந்த்யே நமஸ்தே பக்தவத்ஸலே
நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமோ நம:

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ஆத்மப்ரதக்ஷிண நமஸ்கரான் சமர்பயாமி.

கீழ்க்காணும் சுலோகத்தைக் கூறியபடி பதினான்கு பிரதக்ஷிணை கூட செய்யலாம்.

பாசாங்குசதரா வாணி! வீணாபுஸ்தகதாரிணீ
மம வக்த்ரே வசேன்னித்யம் துக்தகுந்தேந்து நிர்மலா


**சாமரம்**

சதுர்தசசு வித்யாசு ரமதே யா சரஸ்வதி
சதுர்தசேஷு லோகேஷு ஸா மே வாசி வசேத் சதா
சத்ரம் தாரயாமி –
சாமரம் வீஜயாமி
கீதம் ச்ராவயாமி –
ந்ருத்யம் தர்சயாமி
ஆந்தோளிகா மாரோபயாமி –
அஸ்வா ஆரோஹயாமி
கஜான்னாரோஹயாமி –
ஸமஸ்த ராஜோபசார சக்த்யுயோபசார
பக்த்யுயோபசாரான் சமர்பயாமி

வலது கரத்தில் அக்ஷதையும், நீரையும் எடுத்துக்கொண்டு தேவிக்கு சமர்ப்பது போல் தட்டில் விடுதல் வேண்டும்.

அனயாத்யான ஆவாஹனாதி சோடசோபசார பூஜயா ச
சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம்
ஸ்ரீசரஸ்வதி தேவதா சுப்ரீதா சுப்ரசன்னா வரதா பவது.

சாங்காம் சாயுதாம் சவாஹனாம் பதிபுத்ர பரிவார சமேதாம் ஸ்ரீசரஸ்வத்யை நம: ப்ரசாதம் சிரசா க்ருஹ்ணாமி என்றவாறு வழிபாடு செய்து அக்ஷதையைத் தலை மீது இட்டுக் கொள்ளுதல் வேண்டும்.



# புரந்தர தாசர் கீர்த்தனைகளில்
# பார்வதி பரமேஸ்வரன் பரிணயம்



- திருமதி எஸ். வைஷ்ணவி சேஷகிரி,
திருப்பதி.

ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாணத்தை புரந்தரதாசர் மிக அழகாக கன்னட மொழியில் ''அங்கஜ ஜனககெ மங்கள மஹிமகெ...'' எனத் தொடங்கும் கீர்த்தனை வழியாக வருணித்து உள்ளார். கங்கையை ஜடையில் அணிந்தவன், நந்தி வாகனன், சங்கரன், அம்பிகையின் அமர வந்திதன், நச்சுண்டேஸ்வரனான சிவனின் கதைகளைக் கேட்டு சிவப்பிரார்த்தனைச் செய்தால் அப்பரமேஸ்வரன் வேண்டும் வரங் களை எல்லாம் கொடுத்து காப்பான் எனப் பாடி போற்றியுள்ளார்.

ஒரு நாள் மலையரசன் மனைவி யுடன் பார்வதி தேவியைத் தன் மடிமேல் அமர வைத்துக் கொண்டு இருந்தபோது ஆகாய மார்க்கம் வாயிலாக அவர்களின் மாளிகைக்கு வருகை தந்த நாரதரை வரவேற்று சோடச உபசாரங்கள் செய்தனர். தன் மகளின் திருமணம் குறித்து நாரதரிடம் அவர்கள் கேட்க, இவள் சிவனின் அர்த்தாங்கி. தன் கணவனுக்காக தந்தையின் முன்னரே தன்னுடைய சரீரத்தை விட்ட தக்ஷணின் மகளே இந்த பார்வதி தேவி. இவளை அந்த பரமேஸ்வரனைத் தவிர வேறு யாரால் மணக்க இயலும்? என்று கூறிச் சென்று விட்டார். இவ்விஷயங் களை அறிந்த மலையரசன் ஆலோச னையில் ஆழ்ந்தான். பார்வதி மன மகிழ்ச்சியுடன் ஓடி வந்து, தாய் தந்தையரை வணங்கி சோமசேகரரை தன் தவத்தினால் மணம் முடிக்க தன்னை தவத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டாள். அதற்கு பெற்றோர் நெய் சாதம், பட்டு படுக்கை என உல்லாசமாக வளர்ந்த நீ எவ்வாறு காட்டிற்குச் சென்று தவம் இயற்றுவாய்? உன்னைப் பார்க்காமல் நாங்கள் எவ்வாறு இருப்பது? என தமது கவலையைத் தெரிவித்தனர். பார்வதி தேவியோ தங்கள் ஆசியுடன் தூய மனத்தோடு, பக்தி பெருக்கோடு அந்த சோம சேகரரை நான் மகிழவைப்பேன். பக்தியின்றி பூஜித்தால் சிவன் நமக்கு கிடைப்பாரா? தாங்கள் இருவரும் மனமகிழ்வோடு நாக பூஷணனின் வரம் பெற தவம் செய்ய காட்டிற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொண் டாள். இதனைக் கேட்ட மலையரசன் தன் மகள் அந்த சிவனின் அர்த்தாங்கி என்பதை உணர்ந்து சரி என தன் தலையை ஆட்டினான்.

பார்வதி தேவியை அடர்ந்த காட்டிற்கு அனுப்பி வைத்தாலும், அவள் பாதுகாப்பிற்கு வீரர்களை வனத்தைச் சுற்றி நிறுத்தினான்.

பார்வதி தேவியோ மிக்க மகிழ்ச்சியுடன் அரனுடைய திருப்பாதங்களை நினைத்து தியானம் செய்தபடி வனத்திற்குச் சென்றாள். அங்கே நதியில் நீராடி, பருத்தி ஆடை, ருத்ராக்ஷ மற்றும் விபூதியை அணிந்து தன் கண்களை மூடிக்கொண்டு முக்கண்ணனான அரனைத் தியானித்து தவத்தில் மூழ்கினாள்.

அச்சமயத்தில் மாறுவேடத்தில் ஒரு அசுரன் அங்கு வந்து பார்வதியின் அழகில் மயங்கி, "ஓ அழகானப் பெண்ணே! உன்னை நான் தூக்கிச் சென்று என் இடத்தில் வைத்து, உன்னை மணம்


புரிவேன்" எனக் கூறினான். அந்த வார்த்தைகளைக் கேட்டு மிக்க கோபத்துடன் கண்களைத் திறந்து பார்த்தாள் பார்வதி. பார்த்த மறு நொடியே அந்த அசுரன் வெந்து சாம்பல் ஆனான். அவ்வனத்திற்கு மனிதன், ஸுரநாராதிகள், விலங்குகள், பறவைகளில் எந்த ஒரு ஆண் வந்தாலும் அவர்கள் பெண்ணாக மாறக் கடவர் எனச் சாபம் அளித்து தவத்தில் ஆழ்ந்தாள்.

ஆறு மாதக் காலம் கடந்த பின்னர் பார்வதியின் தவத்தில் மகிழ்ந்த சிவ பெருமான் அங்கு நந்தியுடன் சகல பரிவாரங்களை வனத்திற்கு வெளியே நிறுத்திவிட்டு ஒரு அந்தணர் வடிவில் பார்வதியின் முன்னே தோன்றினார். அங்கு வந்த அரன், பார்வதியை நோக்கி "ஓ பெண்ணே! யாரை உன் சிந்தனையில் நிறுத்திக் கொண்டு நீ எதற்காக தவம் செய்துக் கொண்டு இருக்கிறாய்? உன் மனதின் விருப்பங்கள் என்ன எனக்கு கூறுவாயா? என வினவினார்.

சந்திரசேகரன், சோமசேகரன் என்கிற பெயர்களுடைய அந்த முக்கண்ணனை மணக்க விரும்பி, முறையாக தவம் புரிகிறேன். அதற்கு அரன், "புத்தியில்லாதவளே! உனக்கு மனநோய்தான் வந்துள்ளது. முக்கண்ணனான சிவன் உனக்கு எவ்வகையிலும் பொருத்தமற்றவன். ஒரு நிலையான வடிவம், குணம், செல்வங்கள் என ஒன்றும் இல்லாத அவனைப் போய் தவத்தினை இயற்றி விரும்பி கேட்கிறாயே! நீயோ சிறு பேதை. அவனோ முதியவன். அவன் எவ்விதங்களிலும் உனக்கு பொருத்தம் இல்லாதவன். நீ உன் தவத்தினை விட்டு விடு என அறிவுரை கூறினார் அரன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு கோபம் கொண்ட பார்வதி தேவி, இந்திராதி தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய பினாகியாகிய சிவனின் அருமையை அறியாதவனே ஓடி போ. நீ ஒரு அந்தணன். அதனால் உன்னை விட்டு விடுகிறேன். முதலில் இங்கிருந்து போ என்றாள்.

பார்வதியின் மனதில் இருந்த பக்தியை அறிந்த பரமேஸ்வரனான நீலகண்டன் "கங்கையை தன் ஜடா முடியில் தரித்து, சந்திரனின் ஒளி வெள்ளத்தில் முக்கண்ணனான தன்னுடைய சதுர்புஜங்களுடன் காட்சி கொடுத்தார். பருத்தி ஆடை, ருத்ராக்ஷ எல்லாம் களைந்து, சர்வ ஆபரண பூஷிதையாக பார்வதியை மாற்றி, தன்னுடைய தொடை மேல் அமர வைத்துக்கொண்டு நந்தி வாகனத்தில் சகல பரிவாரங்களுடன் வரும் பொழுது, தேவாதி தேவர்கள் எல்லாம் பூமாரி பொழிந்தனர். காமதேனு, கல்ப விருக்ஷம், தும்புரு, நாரதர், ரம்பை, ஊர்வசி, தேவேந்திரர், அஷ்ட அரசர்கள், வஸுக்கள், பிரம்மன், ஸ்ரீஹரி என அனைவரும் திருமண முகூர்த்தத்திற்கு வருகைப் புரிந்தனர்.



பார்வதி தேவிக்கு சிவன் கிடைத்து விட்டார் என்ற நற் செய்தியைக் கேட்டறிந்த மலையரசன் மிக்க மகிழ்வுடன் தேவனை நமஸ்கரித்தான். கருணாகர சங்கரா தாங்கள் எங்களை காப்பாற்ற வேண்டும் என பக்தியோடு துதித்து சிவனைச் சரணடைந்தான்.

சுமங்கலிப் பெண்கள் பாடல்களைப் பாட, மங்கல வாத்திய நாதங்கள் ஒலிக்க, சந்தர சேகரர் பார்வதி தேவியோடு மலையரசனான தன் மாமனுடைய இல்லத்திற்கு வருகை புரிந்தார். வாசலிலே அரன் பார்வதி திருப் பாதங்களுக்கு அபிஷேகம் செய்து ஆரத்திகள் எடுத்து பின்னர் வேத மந்திரங்கள் ஒலிக்க தேவாதி தேவன் மண்டபத்திற்கு வருகை புரிந்தார்.





*முத்தைதெ$_3$ ஹேளித$_3$ரெ இட்டோலெ ஸ்திரவாகி$_3$ அகூஷில்லத$_3$ வரு ஹேளிதெ$_3$ரெ*
*அகூஷியு பருவுது$_3$ ப$_3$டவரு ஹேளித3ரெ ஹெச்சின பதவி ஸேருவரு*
*ப$_3$ரடு$_3$ ஹெளித$_3$ரே கந்த$_3$ன்னெத்தி கொம்பு$_3$வளு ஹெளவ கேளித$_3$ரே*
*நடெ$_3$யுவனு மது$_3$வெயில்லத$_3$வரு ஹேளித$_3$ரே விவாஹ ஒத$_3$கு$_3$த்த கங்கண ப$_3$ஹுது$_3$*

**பரிணயோத்ஸவ கீர்த்தனையை முழுவதுமாகப் பாடினால் கிடைக்கும் பலன்கள் :**

**சுமங்கலிப்பெண்களுக்கு சுமங்கலித் தனம் நிரந்தரமாக இருக்கும். செல்வம் வேண்டியவர்களுக்கு செல்வம், முக்தி வேண்டியவர்களுக்கு முக்தி, சந்தானம் வேண்டியவர்களுக்கு சந்தான பாக்யம், திருமண வாழ்வு வேண்டி துதிப்பவர்களுக்கு நல்ல மணவாழ்வுவும் அமையும். திங்கட்கிழமை, அமாவாசை, சிவராத்திரி, பௌர்ணமி, பிரதமை திதி போன்ற நாட்களில் சோமசேகர விவாஹ வைபவக் கீர்த்தனையைப் படித்தால், கேட்டால் நாம் வேண்டிய வரங்களை அளிப்பதுடன் சகல பாபங்களையும் போக்குவார்.**

இடப்புறத்தில் பிரம்மா, வலப்புறத்தில் விஷ்ணு நடுவில் சங்கரன் அமர ஸுரநாராதிகள் சாமரம் வீசுகையில் அரன் மணமேடையில் கோடான கோடி சூரிய ஒளி போன்று நெற்றியில் பாஷிங்கம், கையில் கங்கணங்களுடன் பீடத்தில் அமர்ந்தார்.


மலர்களால் கூந்தல் அலங்காரம் செய்துக் கொண்டு சர்வாபரணங்களுடன் பாஷிங்கம் கட்டிக் கொண்டு உதிக்கும் சூரியனைப் போன்று ஜொலித் துக் கொண்டு ஒப்பில்லாமல் அமர்ந்திருந்த அரன் இருக்கும் இடத்திற்கு பார்வதி தேவி வந்தாள். நவரத்தின பீடத்தில் அரன் உட்கார்ந்திருக்கும் சமயத்தில் மலையரசனும் மேனகையும் வந்து அரனுடைய திருப்பாதங்களுக்கு அபிஷேகம் செய்து அந்த தீர்த்தத்தினை தன் தலை மேல் தெளித்துக் கொண்டனர்.

பின்னர் மதுபர்க பூஜைகள் செய்து, திருவாபரணங்களைச் சமர்ப்பித்து பலவிதமான பூஜைகள் செய்த பின் தன் மகள் அறியாதவள், வயதில் சிறியவள் அவள் ஏதேனும் தவறுகள் புரிந்தால் அதனை எல்லாம் தாங்கள் மன்னித்து அருளுதல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு ஆனந்தத்துடன் தாரை வார்த்துக் கொடுத்தான். இவ்விதமாக நான்கு நாட்கள் பல விதமான சடங்குகள் நடந்து, பினாகி–கௌரி நாகவல்லி மூஹுர்த்தம் செய்து வைத்தான் மலை அரசன். அவர்களுக்கு வேண்டிய அளவிற்கு தேவையான பொருட்களையும் அளித்தான். பலவிதமான பாயசம், பலஹாரங்கள், புளியோதரை என பல வித உணவு வகைகளுடன் அந்தணர்களுக்கு உணவு அளித்து, தக்ஷிணைகள் கொடுத்தனர். சுமங்கலிப் பெண் களுக்கு முறம் வாயணம், தேங்காய், வெற்றிலைப் பாக்கு, தாமரை மலர், அரளி, மல்லி என அனைத்தும் கொடுத்து, வந்தவர்களை எல்லாம் மகிழ்வித்தனர்.

பக்தர்கள், அஷ்டதிக்பாலகர்கள், அரசர்கள், எந்நேரமும் தவம் இயற்றும் ரிஷிகள் என அனைவரும் பரமேஸ்வரன் பார்வதி தேவிக்கு பட்டாடைகள், பீதாம்பரம், திவ்யாபரணங்கள் என பல காணிக்கைகளை அளித்தனர். அன்புடன் சிறந்த பட்டாடைகள், திவ்ய ஆபரணங்களை நாராயணனும், பட்டாடைகளை பிரம்மனும், முத்துகளை மித்ரேமேனகா தேவியும் பன்னகதரனுக்கும் பார்வதிக்கும் அளித்தனர். பார்வதி தேவி உன்னை பிரிந்து எங்களால் எப்படி இருக்க இயலும் என்று வருத்தமிருந்தாலும் அனைத்து பொருட்களுடனும் கைலாயத்திற்கு கிருகபிரவேச உத்ஸவத்திற்குப் புறப்பட்டனர்.

தேவ பத்தினியர் நாகபூஷணனுக்கும், பார்வதிக்கும் ஆரத்தி எடுக்க கைலாயத்திற்கு வந்த மணமக்கள் கைலாய மலையில் அந்த காந்தனான நஞ்சுண்ட லிங்கனுடன் பார்வதி தேவி திருவடிகள் பட்டவுடன் கைலாயம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது. இவ்வாறு புரந்தர தாசர் பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாணத்தை வருணித்து தம் கீர்த்தனைகளில் பாடியுள்ளார்.

## திருவேங்கடவன் திருவருள்



# அழைத்தான் ஆனந்த நிலயான்

- திருமதி எம். ஜி. மாலினி
சேலம், 9450 297 256.

நாங்கள் எங்கள் குடும்பத்தோடு திருமலைக்குச் சென்று, திருமாலைத் தரிசிக்க வெகு நாட்களாகவே எண்ணம் கொண்டு இருந்தோம்.



தமிழ் மாதங்களில் புரட்டாசி மாதம் மிகவும் சிறப்பானது. அந்த மாதத்தில் வருகின்ற சனிக்கிழமைகள் பெருமாளுக்கு விசேஷமானவை. அப்படிப்பட்ட சனிக்கிழமைகளில் திருமால் பக்தர்கள், எம்பெருமானைத் தரிசித்து தங்களது வேண்டுதலைக் கூற ஆவலோடு காத்திருப்பார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு புரட்டாசி மாதத்தில் ஒரு சனிக்கிழமையன்று அதிகாலை வேளையில் எனக்கு ஒரு கனவு வந்தது. கனவில் எங்களது வீட்டு வாசலில் ஒரு பக்தர் மஞ்சள் வேட்டி துண்டு அணிந்து கொண்டு, நெற்றியில் திருநாமம் இட்டுக் கொண்டு, கைகளில் திருநாமம் போடப்பட்ட பெரிய மண்பாண்டத்தை வைத்துக்கொண்டு ...“நாராயணா, நாராயணா” என்று உரத்த குரலில் கூப்பிட்டார். நானும் அவரிடம் இருந்த பாத்திரத்தில் பெருமாளுக்கு படைக்க ஒரு படி அரிசியைச் சமர்ப்பித்தேன். உடனே விழிப்பு வந்து என்னுடைய கனவு கலைந்து விட்டது.

மறுநாள் என்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். வந்தவர் திருப்பதி திருமலையில் திருமலையப்பனைத் தரிசனம் செய்வதற்கான ஐந்து பேர் அனுமதிச் சீட்டு என்னிடம் உள்ளது. நீங்களும் எங்களுடன் வாருங்கள் என அழைத்தார்.

என்னே ஆச்சரியம்! கனவிலும் நனவிலும் எங்களுக்கு திருமாலின் அழைப்பு வந்து விட்டது என்று மிக்க மகிழ்ச்சியுடன் திருமலைக்குச் சென்றோம். முடிக்காணிக்கையும் செலுத்தினோம்.

நாங்கள் வீட்டில் சனிக்கிழமைதோறும் திருவேங்கடவனை வழிபடும் போது பூஜை அறையில் உள்ள உண்டியலில் இடப்பட்ட வேண்டுதல் தொகையை ஸ்ரீவாரி கோயிலில் உள்ள உண்டியலில் சமர்ப்பித்தோம்.

திருவேங்கடவன் அருளால் ஸ்வாமி தரிசனம் கண்டு வந்த நாங்கள் மனநிறைவோடு வாழ்ந்து வருகின்றோம்.

108 திவ்ய
தேச
வைபவம்

# திருஎவ்வுளூர் 91

## (திருவள்ளூர்)

- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

கிருத யுகத்தில், பத்ரிகாஸ்ரமத்தில், புருபுண்யர் என்கிற ரிஷி, தமது மனைவியாகிய சத்தியவதியுடன் வாழ்ந்து, மக்கட்பேறு இல்லாததால், ஓர் ஆண்டு முழுவதும், சாலி என்ற ஒருவகை நெல்லைக் கொண்டு, யாகம் செய்து பகவானின் அருளால், சாலிஹோத்திரர் என்ற பெயரில் ஒப்பற்ற மைந்தனைப் பெறுகிறார். இவர் பிறக்கும் போதே சடை முடியுடனும், நெற்றியில் திருமண் விளங்கப் பெற்றவனாகவும் பிறந்து உரிய வயதில், கல்வியில் தேர்ந்து, தென்னாட்டில் வீக்ஷாரண்யம் என்கிற இத்தலத்திற்கு வந்து, முக்தியைப் பெறும் நோக்கத்துடன், இத்தலத்தில் ஹ்ருத்தாப நாசினீ என்ற புஷ்கரணியை தைத்திங்கள் அமாவாசை நாள் அன்று அடைந்து அங்கு மண்ணவரும், விண்ணவரும், மாமுனிவர்களும் நீராடித் தூய்மை பெற்றுச் செல்வதை அறிந்து, அவ்விடத்திலேயே உணவைத் துறந்து, உறக்கத்தைக் கைவிட்டு, பெருந்தவத்தைச் செய்கிறார். ஓராண்டு முடிவில் தான் பெற்ற நெல்லைக் கொண்டு தயாரித்த உணவை நான்கு பகுதியாகப் பிரித்து, வரப்போகும் விருந்தினருக்காக ஒரு பகுதியை வைத்து, முனிவர் காத்திருந்த போது, முதுமையான அந்தணர் வடிவில் வந்த ஒருவர், பசி மிகுதியால் எல்லா உணவினையும் உண்டு விட்டு உடன் மறைந்து விடுகிறார்.



சாலிஹோத்திரர் மறுபடியும் ஓராண்டு தவம் செய்து அதே தைத் திங்கள் அமாவாசை நாள், சாலிஹோத்திரர் உணவுடன் காத்துக்கிடக்க, முன்பு வந்த அதே வடிவில் விருந்தினர் வர, மிக்கப் பசியினால் உணவைப் பருகுவதற்கு நீர், தாம் களைப்புத்தீர உறங்குவதற்கு இடம் இவற்றைக் கேட்டார்.

*“அன்னம் தேஹி, ஜலம் தேஹி ஸ்தானம் கிஞ்சித் ப்ரதேஹிமே*
*நித்ராம் கர்த்தும் ஸ்ஙகே நாத்யேத் அப்ரவீத் வ்ருத்த பூஸுர:*

தான் வாழும் குடிசையிலேயே தங்கலாம் என்று சாலிஹோத்திரர் கூறியபோது, அங்கே கிடந்த கோலத்தில் பகவான் சேவை சாதிக்க, வானத்தில் தேவர்கள் மலர்மாரி பொழிந்து, மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். தான் தங்க வேண்டிய உள் “எந்த உள்?” என்று பகவான் கேட்டாராம். அதனால் இத்திவ்ய தேசமும் “திருஎவ்வுள்” என்று ஆகி, திருஎவ்வுளூர் என்று மாறி, திருவள்ளூர் ஆயிற்று. சாலிஹோத்திரரின் வேண்டுதலை ஏற்று, அங்கேயே அர்ச்சையில் கிடந்த கோலத்தில் சேவை சாதிக்கிறார்.





| | |
|---|---|
| **பெருமாள்** | **: வீரராகவப்பெருமாள், எவ்வுள் கிடந்தான், வைத்ய வீர ராகவன் (கிழக்கு நோக்கிய கிடந்த திருக்கோலம்).** |
| **தாயார்** | **: கனகவல்லித்தாயார், வசுமதித் தாயார் (தனிக் கோயில் நாச்சியார்).** |
| **தீர்த்தம்** | **: ஹ்ருத்தாபநாசினி புஷ்கரணி.** |
| **விமானம்** | **: விஜயகோடி விமானம்.** |
| **ப்ரத்யக்ஷம்** | **: சாலிஹோத்ர மாமுனிவர்.** |
| **ஆகமம்** | **: பாஞ்சராத்ரம்.** |
| **மங்களா சாஸனம்** | **: திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார்.** |

இன்றும் எம்பெருமான் தனது வலத் திருக் கரத்தை சாலிஹோத்ர மாமுனிவரின் தலையில் வைத்து அருள்கிறார். இடக்கையால் பிரமனுக்குப் பிரணவ உபதேசம் செய்கிறார். மது, கைடபர் என்ற இரு அரக்கர்கள் எம்பெருமானார் படைத்த ஐந்து பூதங்களின் ஆற்றலையும் அடக்கி உலகிற்கு தீங்கு செய்தபோது, பகவான் தனது சக்ராயுதத்தால் அவர்களை அழித்து வெற்றி பெற்றதால், எம்பெருமான் எழுந்தருளியுள்ள விமானம் விஜயகோடி விமானம் என்று ஆயிற்று. இத்தலத்தில் ஒருவர், அறிந்தோ, அறியாமலோ செய்கின்ற புண்ணியங்கள் பல மடங்கு பயனைக் கொடுப்பதால் இது புண்யாவர்த்த க்ஷேத்திரம்.

மஹாலக்ஷ்மி இங்கு வந்து தர்ம சேனனுக்கும், அவன் மனைவி கௌதமிக்கும் திருமகளாய் பிறந்து இத்தலத்து எம்பெருமானை மணந்து, கமலவல்லித் தாயார் என்ற திருப்பெயரில் தனிக்கோயில் நாச்சியாராக சேவை சாதிக்கிறார். பகவானின் இராமாவதாரத்தில் இராவணனை அழித்து அயோத்தி சென்று முடி சூடிக் கொண்ட பின்பு சீதையை இலக்குவனைக் கொண்டு கானகம் அனுப்பினான் என்றும், அப்போது சீதை பிரிந்த நிலையில் இராமன் அசுவமேதை யாகம் செய்தபோது சீதைக்குப் பதிலாக, பொன்னால் ஆன சீதையின் வடிவை யாக சாலையில் நிறுத்தி, யாகத்தை முடித்தான் என்றும், அத்தகைய பொன்வண்ணச் சீதை இங்கு வசுமதி என்ற பெயரில் அவதரித்து, கனகவல்லித்தாயார் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.

இத்திவ்ய தேசத்திற்கான தல வரலாற்றைப் போன்றே இங்குள்ள "ஹ்ருத்தாபநாசினி" என்ற புனிதத் திருக்குளத்திற்கு தனியான வரலாறு உண்டு.

இப்புனிதத் தீர்த்தத்தைக் கண்ணால் கண்டாலும் அல்லது தீர்த்தத்தைத் தெளித்துக் கொண்டாலும், அல்லது நீரிலே இறங்கிக் குடைந்து நீராடினாலும் மனத்துயரம் எல்லாம் நீங்கும் என்பர்.

சிவபிரான் தக்ஷனின் மகள் சதியை மணந்து கொண்ட பின்பு, தக்ஷன், சிவனை இழிவு படுத்தியும், அழைக்காமலேயே யாகசாலைக்கு வந்த சதியை வரவேற்காமல் புறக்கணித்தும் இருந்ததால், சதி, தனது புனித உடலை, யோகத்தீயால் எரித்து, உயிர் விடவும், அதனைப் பொறுக்காத சிவபிரான், தனது ஆற்றலால் வீரபத்திரரைப் படைத்து தக்ஷனின் யாகத்தை அழித்து, தக்ஷனையும் அழித்தார்.

அதனால் உண்டான பிரம்மஹத்தி என்ற தோஷம் சிவபெருமானைத் தொடரவே, சிவபிரான், ஹ்ருத்தாபநாசினியில் நீராடி, அத்துன்பத்தில் இருந்து விடுபட்டார் என்றும், சிவபிரான் ஹ்ருத்தாப நாசினிக்கரையில் "தீர்த்தேஸ்வரர்" என்ற பெயரில் இருப்பதாகவும் சொல்வர்.

பிரத்யும்னன் என்ற பேரரசன் மிகத் தூயவனாய் சந்ததிக்காக, இத்தீர்த்தக் கரையில் நூறு ஆண்டுகள் தனது இடது கால் கட்டை விரலை நிலத்தில் ஊன்றி நின்ற நிலையில் கடினமான தவம் செய்தான். பகவான் தோன்றி அவனுக்குக் குழந்தைப் பேற்றையும் கொடுத்து, மேலும் அவ்வரசன் வேண்டிய வண்ணம், ஒவ்வொரு ஆண்டும், தை

அமாவாசை அன்று மற்ற எல்லாத் தீர்த்தங்களுக்கும் மேலான சிறப்பை, ஹ்ருத்தாபநாசினிக்குக் கொடுத்து அருளினான் என்றும் சொல்லப்படுகிறது.

கௌசிகன் என்ற அந்தணன், பிரம்மசரிய நிலையில் மெய்யுணர்வு பெற்ற இவன், பெற்றோருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்து பற்று அற்ற நிலையில் தீர்த்தயாத்திரையாக பல திவ்ய தேசங்களை வழிபட்டு தண்டகாரண்யத்தை அடைந்தபோது, பசியினாலும், தளர்வினாலும் களைத்து யார் என்று ஆராயாமல் ஓர் இழிந்த பண்பாளனிடம் உணவை யாசித்தான்.

அவன் இவனைத் தன் வீட்டில் அமர்த்தி, உணவளித்து, இவன் தளர்ச்சியை நீக்கிப் பணிவிடை செய்யத் தன் மகளுக்கு ஆணையிட, கௌசிகன் பிரம்மச்சர்யத்தைத் துறந்தான். பிறகு உயர்ந்த குறிக்கோள் நினைவுக்கு வர எம்பெருமானின் கருணையால், தை அமாவாசை அன்று ஹ்ருத்தாபநாசினியில் தீர்த்தம் ஆடும் பேறு பெற்று, நரக வாழ்வில் இருந்து நீங்கி பகவானை அடைந்தான் என்பர்.

## சிறப்புகள்

“யான் தங்குவதற்கு உரிய உள் எது?” என்று கேட்டதாலேயே “திருஎவ்வுள்” ஆயிற்று. வடமொழியில் “கிம் கிருஹேசன்” என்றும், தமிழில் “திரு எவ்வுளூர் கிடந்தான்” என்றும் பெயர் பெற்ற இத்தலத்து எம்பெருமான் திருமங்கை ஆழ்வாரின் மங்களாசாசனம் நிகழ்ந்தபின்னர், அவர் இவ்வூர் எம்பெருமானை இராமனாகக் கண்டு பாடியதால், அவரது அருளிச் செயலின் அடிப்படையில் “வீர ராகவன்” என்று பெயர் பெற்றார்.

“மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன்” என்றபடி நோய் தீர்க்கும் பெருமானாய் எவ்வுள் கிடந்தான் “வைத்ய வீர ராகவன்” திருப்பெயரால் கொண்டாடப்படுகிறான். இத்தலத்து எம்பெருமானால் நோய் நீங்கப் பெற்ற வடலூர் வள்ளல் “போற்றித் திருப்பஞ்சகம்” என்ற தலைப்பில் அருளி உள்ளார்.

*“வற்புறு பிணி தீர்த்து என்னை மகிழ்வித்த வரதா! போற்றி! வெற்புயர் எவ்வுளூர் வாழ் வீரராகவனே! போற்றி”* என்கிறார் வடலூரார். “கவி தார்க்கிக சிம்மம்” என்று பெயர் பெற்ற ஸ்வாமி தேசிகன், இத்தலத்து எம்பெருமான் மீது “கிங்கிருஹேச ஸ்துதி” என்ற பெயரில் தனியாக தோத்திரம் செய்துள்ளார். விசுவகுணாதர்சம் என்ற பெருநூலை அருளிய ஸ்ரீவேங்கடாத்ரி என்ற கவிஞரும், தமது நூலில் இப்பெருமானைப் போற்றிப் பாடி உள்ளார். மார்க்கண்டேய புராணத்தில் இத்தல வரலாற்றுச் செய்திகள், “வீக்ஷாரண்ய க்ஷேத்திர மாகாத்மியம்” என்று கூறப் பெற்றுள்ளன.

ஸ்ரீமத் அஹோபில மடத்தின் ஆளுகைக்கு உட்பட்டது இத்திவ்யதேசம். “ஹ்ருத்தாபநாசினி” என்ற இத்தலப் புண்யதீர்த்தத் தென்கரைப் பகுதியில், ஸ்ரீமத் அஹோபிலமட ஆஸ்தாநத்தை அணி செய்த, 2,33,34, 35,42 பட்டத்தைச் சார்ந்த ஆசாரியர்களின் பிருந்தாவனங்கள் இடம் பெற்றுள்ளன.

### விசேஷம்



**ஸ்ரீமத் அஹோபில மடத்து ஆஸ்தான பரம்பரையில், 34வது ஸ்ரீமத் அழகிய சிங்கர் என்கிற “அத்திப்பட்டு அழகிய சிங்கர், “அந்தணர் வாழ்வு இடத்தில் (அக்கிரகாரத்தில்) அந்தணர்க்கு உரிய வேத ஒழுக்கங்களை அறியாதவனாயும், அவைகளை வாழ்க்கையில் கடைபிடியாமலும் வாழ்ந்து வந்த ஒருவன், ஹ்ருத்தாபநாசினியில் அமாவாசை அன்று நீராடுவதை மட்டும் விடாப்பிடியாகச் செய்து வந்த காரணதால், அவன் உயிர்பிரியும் சமயத்தில் திருவள்ளூர் எம்பெருமான் பப்ளித் துப்பப்பட்டியை அணிந்து கொண்டு (இவ்வூர் எம்பெருமானுக்கு உரிய ஆடை) சேவை சாதித்து பரமபதத்துக்கு அழைத்துச் செல்கி றான் என்று அவன் கூக்குரல் இட்டதாகக் கூறி உள்ளார்.**

**திவ்ய தேச வாழ்த்துப் பாசுரம் :**

*வெவ்விட மதுகையிடவரோடு அளப்பு இல்*
*அமர் செய்து அங்கு அவர் உயிர் வீட்டி,*
*அவ்வியம் அகல் மாமுனிவன் ஆச்சிரமத்து*
*அமர்ந்து செய்து ஆசுஇல் நீர்பருகி*
*மைவண முகில்மேல் வனச மா மலர்கள்*
*மலிந்த போல்மெய்யெலாம் மயங்க*
*வெவ்வுளில் அரவின் மிசைத் துயில்*
*வீர்ராகவன் இருபதம் வாழி*

**த்யானச்லோகம் :**

*வீக்ஷாடவீ விஜயகோடி விமாந வர்யம்*
*ஹ்ருத்தாப நாசன ஸர: கநகாக்யதேவீ ।*
*ஸ்ரீவீரராகவ ஹரி: ச்ரித பாரி ஜாத:*
*ஸ்ரீசாலி ஹோத்ர வரதோ ஹரிதிங்முகோபூத்॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம்**

*சோத்த நம்பி யென்றுதொண்டர் மிண்டித்*
*தொடர்ந்தழைக்கும்*
*ஆத்த னம்பி செங்கணம்பி யாகிலும் தேவர்க்*
*கெல்லாம்*
*மூத்த நம்பி மூக்கணம்பி யென்று முனிவர்தொழு*
*தேத்தும் நம்பி யெம்பெருமா னெவ்வுள்*
*கிடந்தானே.*

– திருமங்கையாழ்வார்

*“நீர்மைகெட வைதாரும் நின்னோடு எதிர்த்தாரும்*
*சீர்மைபெற நின் அடிக்கீழ்ச் சேர்கையினால் -*
*நேர்மை இலா*
*வெவ்வுளத்தினேன் செய்மிகையைப் பொறுத்து*
*அருளி*
*எவ்வுள் அத்தனே! நீ இரங்கு”*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*861. ஓம் தநுர்தர: நம:*
சார்ங்கம் என்கிற வில்லைத் தரிப்பவன்.
*ஓம் ஸிந்துமதீ: நம:*
ஆறுபோல் ப்ரவகிக்கும் கருணை உள்ளவள்.

*862. ஓம் தநுர்வேத: நம:*
வில்வித்தையை முதன்முதலில் தோன்றச் செய்தவன்.
*ஓம் அமா: நம:*
அறிவுக்கு அப்பாற்பட்டவள்.

*863. ஓம் தண்ட: நம:*
அரசர்கள் மூலமாக தண்டனையை வழங்குபவன்.
*ஓம் வ்ருத்தி: நம:*
வளர்ச்சியை அளிப்பவள்.

*864. ஓம் தமயிதா: நம:*
தானே நேராகவும் தண்டிப்பவன்.
*ஓம் ஸ்திதி: நம:*
ரக்ஷிப்பவள்.

*865. ஓம் அதம: நம:*
யாராலும் அடக்க முடியாதவன்.
*ஓம் த்ருவா: நம:*
எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பவள்.

*866. ஓம் அபராஜித: நம:*
தன் ஆணைகள் எங்கும் தடைபடாதவன்.
*ஓம் புத்தி: நம:*
அறிவே வடிவானவள்.

*867. ஓம் ஸர்வஸஹ: நம:*
எல்லாரையும் தானே தாங்குபவன்.
*ஓம் த்ரிகுணா: நம:*
ப்ரக்ருதி மண்டபத்திலும் அடையப்படுபவள்.

*868. ஓம் நியந்தா நம:*
பிற தேவதா விச்வாஸிகளையும் தானே நடத்துபவன்.
*ஓம் குணகஹ்வரா: நம:*
தோஷமற்ற பரமபதத்திலும் பலன்களைத் தானே அளிப்பவள்.

*869. ஓம் நியம: நம:*
பிற தேவதைகள் மூலமாகப் பலன்களைத் தானே அளிப்பவன்.
*ஓம் பூர்த்தி: நம:*
இப்படி இரண்டு இடங்களிலும் அடியார்கள் அடையப் பகவானைப் போல எங்கும் நிறைந்து இருப்பவள்.

*870. ஓம் யம: நம:*
தேவர்களுக்கும் அதிகாரத்தைத் தந்து வழி நடத்துபவன்.
*ஓம் மாயாத்மிகா: நம:*
ஞ்ஞானாநந்த மயமாக இருப்பவள்.

*ஸ்ரீமதே கனகவல்லீ (வஸுமதீ) நாயிகா ஸமேத*
*ஸ்ரீவைத்ய வீர ராகவ, கிங்க்ருஹேச பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

வீக்ஷாரண்ய க்ஷேத்ரம் என்கிற திருவள்ளூர், சென்னை – அரக்கோணம் ரயில்பாதையில் 42 கி.மீ. தூரத்தில் அமைந்து உள்ளது. சென்னையிலிருந்து பேருந்து வசதிகளும் உள்ளன.

*தொடர்ந்து தரிசிப்போம்...*



அப்பிள்ளை அருளிய
ஆழ்வார் ஆசார்யர்கள்
வாழித்திருநாமமும் உரையும்

# இராமாநுசர்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி
வரதராஜன் ஸ்வாமி,
சென்னை,
9841884972

சென்ற இதழின் தொடர்ச்சி...

(பக்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே) ஸ்ரீரங்கத்துக்கு பெரிய நம்பிகள் இராமாநுசரை அழைத்துச் சென்றபோது ஆளவந்தார் பரமபதித்ததை அறிந்து துடித்து, அவருடைய சரம திருமேனியைச் சேவித்த இராமாநுசர், அவர் மூன்று திருவிரல்கள் மடங்கியுள்ளதைக் கண்டார். சீடர்களை விசாரித்தார். அவர்கள் ஆளவந்தார், "வ்யாஸ பராசரரிடத்திலே உபகார ஸ்ம்ருதியும், நம்மாழ்வார் பக்கல் ப்ரேம மிகுதியும், வ்யாஸ ஸூத்ரத்துக்கு விசிஷ்டாத்வைத பரமாக வ்யாக்யான வாஞ்சையும் பலகால் சொல்லக் கேட்டிருந்தோம்" என்றனர்.

"இந்த மூன்று எண்ணங்களை ஆளவந்தார் அருளாலும், ஸர்வேச்வரன் அருளாலும் செய்து முடிப்பேன்'' என்று இராமாநுசர் சொன்ன உடனே திருவிரல்கள் நிமிர்ந்தன. பின்னர் ஆளவந்தார் அருளால் ப்ரஹ்மஸூத்ரத்துக்கு வியாக்யானம் இட்டருளி ஸரஸ்வதியின் அங்கீகாரம் பெற்று ஸ்ரீபாஷ்யம் என்றும், ஸ்ரீபாஷ்யகாரர் என்றும் திருநாமம் சாத்தி கௌரவித்தது குருபரம்பராப்ரபாவம் முதலான நூல்களில் விரிவாகக் காணலாம். இதனால் ஆளவந்தாரின் எண்ணத்தில் ஒன்று நிறைவேற்றியபடி, அந்த ஸ்ரீபாஷ்யத்தை பின்னர் ஸ்ரீரங்கத்தில் கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார் முதலான சீடர்களுக்கு உபதேசித்தார். மேலும், உடையவர் நித்ய கைங்கர்யம் பண்ணின சீடர்களில் கூரத்தாழ்வானும், முதலியாண்டானும், நடாதூராழ்வானும், பட்டர் வர்க்கமும் ஸ்ரீபாஷ்யத்துக்கு உசாத்துணையாயிருப்பார்கள் என்று குருபரம்பராப்ரபாவம் கூறும். திருக்குருகைப்பிரான் பிள்ளான், கிடாம்பியாச்சான், எங்களாழ்வான் முதலான சீடர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் சொல்லி வைத்ததை அவரவர்கள் தனியனில் காணலாம். அவ்வாறே எழுபத்து நான்கு ஆசார்யர்களும் ஸ்ரீபாஷ்யம் கேட்டு இருந்தனர் என்பதையும் ''ராமாநுஜார்யாச்ச்ருதி மௌளிபாஷ்யம் அர்த்தம்...'' என்ற பொது தனியன் மூலம் அறியலாம். இது பற்றியே "பாடியத்தைப் பகர்ந்திட்டான்" என்றபடி.

(பதின்மர் கலை உட்பொருளைப் பரிந்து கற்றான் வாழியே) பதின்மர் ஆவர் பொய்கையாழ்வார் தொடக்கமாக திருமங்கையாழ்வார் ஈறாக அவர்கள் அருளிய கலையாவது திவ்யப்ரபந்தங்கள். அவற்றின் உட்பொருளாவது ரகஸ்ய த்ரயம் என்று சொல்லப்படும் திருமந்திரம், துவயம், சரம ச்லோகம். பெரிய நம்பிகள் பஞ்ச ஸம்ஸ்காரம் ஆனவுடன் திருமாலை, திருப்பள்ளி

எழுச்சி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெரியாழ்வார் திருமொழி முதலான ஈராயிரமும் சாதித்தருளினார். பெரிய திருமொழி, திருவாய்மொழி, கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யாநம் சாதித்தவர் திருவரங்கப் பெருமாள் அரையர்.

ஒரு சமயம் திருவரங்கத்துக்கு எழுந்தருளி, திருக்கோட்டியூர் நம்பி திருமாலை ஆண்டானை அழைத்துக் கொண்டு மடத்துக்கு வந்துபோது எம்பெருமானார் நம்பி திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரை கடாக்ஷித்து, "நீர் திருமாலை ஆண்டானிடம் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளும்" என்றார். இதுபற்றியே திருமாலை ஆண்டானும் பெரிய திருமொழி, திருவாய்மொழி முதலான நாலாயிரத்துக்கும் வ்யாக்யாநம் சாதித்தருளினார். உடையவரும் ஆர்வமுடன் கற்றார். அப்படிப்பட்ட இராமாநுசர் வாழ்க.

(சுத்த மகிழ் மாறன் அடி தொழுது உய்ந்தோன் வாழியே) மகிழ் மாறன் – வகுளாபரணரான ஆழ்வார், சுத்தி, தூய்மை, மகிழ்மாறனுக்குத் தூய்மையாவது சரணாகதனான எம்பெருமான் தண்துழாய் விரைநாறு கண்ணியனானாப்போலே, சரணாகதரான ஆழ்வாரும் மகிழ்மாறனானார். அது தலைவனாம் தன்மையைத் தெரியப்படுத்தும். இது அடிமையாம் தன்மையைத் தெரிவிக்கும் என்பர் பிள்ளைலோகம் சீயர்.

(தொல் பெரிய நம்பி சரண் தோன்றினான் வாழியே) நித்ய ஸூரிகளில் ஒருவரான குமுதர் என்பவரின் அம்சமாய், பெரும்புகழாளராய், வேதவேதாந்தங்களை நன்கு கற்றவராய், எல்லா





- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர் நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர் முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025, 2264619.

இணையதளம் : www.tirumala.org
மின்னஞ்சல் : officebirrd@gmail.com
மொபைல் செயலி : BIRRD HOSPITAL



## பாரதியாரின் பொன்மொழி வாழ்க்கையின் வழிகாட்டி

### “ஆண்மை தவறேல்”

*இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர்*
*எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு*
*தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்;*
*தீமையெலாம் அழிந்து போம், திரும்பி வாரா.*

**“ஆண்மை” என்பது பண்புத்தொகை. ஆளுமைத்தன்மை என்று பொருள்படும். ஆண்மை என்றால் “கம்பீரம், துணிவு, அஞ்சாமை, வீரம், பிறன்மனை நோக்காமை” என்பதாகவே பாரதி கூறு கிறார். எனவே ஆண்மை என்பது ஒவ்வொரு ஆணுக்கு மட்டுமல்ல, பெண்ணிற்கும் அவசியம் வேண்டும். குழந்தைகளே! ஆணும் பெண்ணும் தம்மைத்தாமே ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள தற்காப்புக் கலைகள் கற்க வேண்டும். அனைவரும் இறைபக்தி கலந்த ஆண்மையோடு செயல்படுங்கள்.**

**டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை**
**மகாகவி பாரதியார் வம்சாவளி**

சாஸ்த்ரங்களிலும் வல்லவரானவர் பெரிய நம்பியாவர். தேவப்பெருமாள் கட்டளைப்படி ஆளவந்தாரின் சீடரான பெரிய நம்பியைச் சரணமாகப் பற்றினார் இராமாநுசர். அதாவது இராமாநுஜர் பெரிய நம்பியைப்பற்ற ஸ்ரீரங்கத்துக்குச் சென்றார். வழியில் மதுராந்தகத் திலே ஸ்ரீபூநீளாதேவியோடு கூடிய கருணாகரப் பெருமாளையும், ஸீதையுடன் கூடிய ஏரி காத்த இராமனையும் சேவித்திருந்தார். அந்த சமயத்தில் ஆளவந்தாரின் கட்டளைப்படி இராமாநுஜரை ஆட்கொள்ள, ஆளவந்தாரின் சீடரான பெரிய நம்பிகளும் மதுராந்தகம் வந்தடைந்தார்.

அங்கேயே தெய்வச் செயலாலே பெரிய நம்பிகளுடைய திருவடித் தாமரைகளை இராமாநுஜர் சேவித்து ஆனந்தக் கண்ணீர் நிறைந்தவரானார். ஒருவருக்கு ஒருவர் தங்களுக்கு ஏற்பட்ட நியமனத்தை (அதாவது தேவப்பெருமாள் கட்டளை இராமாநுஜருக்கு, ஆளவந்தார் கட்டளை பெரிய நம்பிகளுக்கு) விசாரித்து, மகிழ்ச்சி அடைந்து அந்த மதுராந்தகம் கோயிலிலேயே மகிழ மரத்தின் நிழலுடைய அவ்விடத்தையே பரமபதமாக எண்ணி பெரிய நம்பியை இராமாநுஜர் ஆசார்யராக அடைந்தார். பெரிய நம்பிகளும் அவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்வித்தார். இது பற்றியே பெரிய நம்பி சரண் தோன்றினான் என்றபடி.

(சித்திரையில் திருவாதிரை நாள் சிறக்க வந்தோன் வாழியே) *‘‘சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை’’* என்றும், *‘‘சித்திரையில் செய்ய திருவாதிரை’’* என்றும், *“இந்தத் திருவாதிரைதன்னின் சீர்மை’’* என்றும் பலபடியாகப் போற்றுவர் மாமுனிகள். சித்திரை மாதத்தோடு கூடிய திருவாதிரை நக்ஷத்ரமானது எம்பெருமானார் அவதரித்த ஸ்ரீமானான மாதமும், அவர் அவதரித்த நக்ஷத்ரத்தோடு பக்கத்தில் அண்மையான நக்ஷத்ரமுமாயிற்று.

இவரும் ஸ்ரீமான் இளையாழ்வார் அன்றோ. இராமன், அவன் தம்பியான இளைய பெருமாள் இருவருக்கும் முன்னாளும் பின்னாளுமான திருவாதிரையும், புனர்வஸுவுமாகப் பெற்றது. இப்படி எல்லா நாள்களைக் காட்டிலும் திருவாதிரைக்கு ஏற்றமாவது அக்காலத்தில் திரிவிக்ரமன் விஜயத்துக்கு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பறை அறைந்து திரிந்தாற்போலே, வாமனன் சீலனான இராமாநுஜருடைய அவதார நக்ஷத்ர வைபவத்தை உலகறிய பிரசித்தமாம்படி பறை சாற்றுவதாக அனுபவிப்பர் மாமுனிகள்.

## 2025, மார்ச் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 06-14 | தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 07 | திருக்கச்சி நம்பிகள் சாத்துமுறை |
| 08-16 | ஐதராபாத் ஜூப்லிஹில்ஸ் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 09 | குலசேகராழ்வார் திருநட்சத்திரம் |
| 09-13 | திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 14 | ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, குமாரதாரா தீர்த்த முக்கோட்டி, |
| 27-ஏப்.04 | திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 30 | யுகாதி,தெலுங்கு வருட பிறப்பு (விஷ்வாவசு நாமம்), வஸந்த நவராத்திரி ஆரம்பம். |
| 31 | மத்ஸ்ய ஜயந்தி |



**மங்கல சுலோகங்கள்**

*வநமாலீ கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ ।*
*ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர் வாஸுதேவோ (அ) பிரக்ஷது ॥*

**வனமாலை அணிந்தவரும், கதை, சார்ங்கம் (என்னும் வில்), சங்கு, சக்ரம், நந்தகம் (என்னும் வாள்) ஆகிய வற்றைத் தரித்தவரும், லக்ஷ்மியுடன் கூடியவரும், நாராயணன், வாசுதேவன் என அழைக்கப்படுபவருமான விஷ்ணு காப்பாராக.**

மேலும், சூரியனானவன் திருவாதிரை நக்ஷத்ரத்தில் பிரவேசம் பண்ணினாற்போலே ஆயிற்று. இராமாநுஜரும் திருவாதிரையிலே உதித்தருளினபடி. அப்போதன்றோ பயிர்கள் எல்லாம் நிலை செய்வது. இங்கும் அப்படி ஆயிற்று. ஆத்மாவாகிற பயிர்கள் எல்லாம் அறிவு பிரகாசம் செய்ததும், சூரியனால் உண்டாவது மழை என்று பிரம்மாண்ட புராணம் கூறும். அதுபோல இங்கும் கருணை மழை உண்டன்றோ. மலர் மலரும் போதான சித்திரை மாதத்தில் அழகிய திருவாதிரை அல்லவா அவதரித்தருளிற்று. அழகாரும் எதிராசர் என்று அவதரிக்கையால் வந்த அழகுண்டன்றோ. திருவாதிரை நக்ஷத்திரம் சிவந்து இருக்கும். சிவந்த வடிவையுடைய ஸ்ரீமான் அவதரிக்கையாலே அதுவும் அப்படியே ஆயிருக்கை. சிவப்பான ஓர் சூரியனின் தன்மை ஆயிற்று இராமாநுஜர் தன்மையும். இதுபற்றியே ஆளவந்தார் இராமாநுசரைக்காண காஞ்சிக்கு வந்தபோது திருக்கச்சி நம்பிகள், *"சிவந்து வலிய நெடியராய்"* இருந்த இருப்பைக் காட்டினாரல்லவா. இது பற்றியே சிறக்க வந்தோன் என்றபடி.

(சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே) பெரும்பூதூருக்குச் சீர்மையாவது சிவந்து அழகிய மீன்களையுடைய குளங்களாலே சூழப்பட்டிருக்கிற விளை நிலங்களினாலே நித்யமாக உண்டான நகர அலங்காரங்களை உடையதாய், இராமாநுசர் அவதரித்தமையேயாகும். முனிவன் – மனன சீலர்.

ஆண்டாளுடைய இயல்பான கருணையாலே வாழ்ந்து கொண்டு பரம உதார ஸ்வபாவராய், அத்தாலே எல்லாருக்கும் பரமபதத்தைக் கொடுக்கைக்கு மனனம் பண்ணிக் கொண்டு இருக்கிற எம்பெருமானார் என்பதற்குச் சேர "இராமாநுசன் என்னும் மாமுனியே" என்பர் அமுதனார்.

அதாவது எல்லாக்காலத்திலும் தன்னை அடைந்தவர்களின் காப்பில் தானே மனனம் பண்ணிக் கொண்டிருக்கிறவராகையாலே முனிவன் என்றபடி. அத்தகைய முனிவரான இராமாநுசருக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

*இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்...*

## குறுக்கெழுத்துப்புதிர் 103க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கோ | வி | லூ | ர் | னூ | த | ஆ | ரு | 2 தி |
| ரு | | 3 ச | | 4 க | லோ | பூ | டி | | 5 வ | | ரு |
| நெ | 6 செ | க் | | ண் | | ஹா | கோ | | ரா | 7 பீ | ப் |
| ல் | வ் | ரா | | ண | | ல் | ம | | க | ஷ் | பு |
| லி | 8 வா | யு | | ன் | | 9 கொ | 10 ரா | | மூ | ம | லி |
| | ய் | த | | 11 இ | ரா | மா | நு | ஜ | ர் | ர் | யூ |
| | | ம் | | 12 ஸ்ரீ | வி | ல் | லி | பு | த் | தூ | ர் |
| வை | | டி | கு | ங் | ய | ளி | ள் | 14 வெ | தி | த் | லா |
| 15 பா | ற் | க | ட | ல் | | யு | டா | 16 ஜ | | 17 ஆ | ல் |
| ப் | 18 வே | ம் | ப | த் | தூ | ர் | ண் | | | | வ |
| ரு | 19 பா | ஞ் | ச | ரா | த் | ர | 13 ஆ | க | ம | ம் | ரு |
| 20 தி | ரு | ப் | ப | ல் | லா | ண் | டு | ள் | க | ங் | 21 தி |





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- **“ஸப்தகிரி”** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **“ஸப்தகிரி”** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **“ஸப்தகிரி”** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- **“ஸப்தகிரி”** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள் சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- **“ஸப்தகிரி”** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஓ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **“ஸப்தகிரி”** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் “பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி” எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, “பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507” என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **“ஸப்தகிரி”** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **“ஸப்தகிரி”** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் “chiefeditortpt@gmail.com” எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு “பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507” எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

மேலும் தகவல்களுக்கு :
**0877- 2264543, 2264359**

*அலசுவோம்...*

*அறிவோம்...*

*ஆதிகாவிய நாயகர்களை...*



# தியாகத்தால் உயர்ந்த ஜடாயு



**ஜடாயுவின் வடிவத்தில் தங்கள் தந்தையார் தசரதச் சக்கர வர்த்தியை நேரில் கண்டது போன்று உணர்ந்தார் ஸ்ரீராமர்**

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,காஞ்சிபுரம், 9486139685

ஸ்ரீராமர், சீதாப் பிராட்டியார், லக்ஷ்மணன் தங்களுடைய வனவாசத்தில் சுமார் பத்து வருட காலத்தை தண்டகாரண்ய வனத்தில் இருந்த ரிஷிகளைத் தரிசனம் செய்து மகிழ்ச்சியுடன் கழித்தனர். பின்னர் அகஸ்திய முனிவரின் அறிவுரைப் படி பஞ்சவடி என்ற இடத்திற்குச் செல்ல முடிவு செய்து அவ்விடம் நோக்கிக் கிளம்பினர்.

அவ்வாறு செல்லும் வழியில் வயதான கழுகு ஒன்றைச் சந்தித்து "நீங்கள் யார்?" என்று கேட்டனர். "என் பெயர் ஜடாயு. என்னுடைய அண்ணனின் பெயர் சம்பாதி. சிறுவயதில் மிகுந்த பலம் கொண்டிருந்த நானும், என் அண்ணன் சம்பாதியும் ஒரு முறை ஆகாயத்தில் மிகவும் உயரமாகப் பறந்து சூரியனை நெருங்கினோம். சூரியனை நெருங்க நெருங்க அதன் தகிப்பு அதிகமானதால் நான் மிகவும் சிரமப்பட்டேன். அதைக்கண்ட என் அண்ணன் சம்பாதி தனது சிறகுகளால் என்னை அணைத்துக் காப்பாற்றினார். அச்சமயம் அவருடைய சிறகுகள் எரிந்து சாம்பலாயின. மேற்கொண்டு பறக்க முடியாமல் கீழே விழுந்து விட்டார். நானும் வெப்பம் தாங்காமல் விழுந்து விட்டேன். தற்பொழுது இந்தக் காட்டில் வசித்து வருகின்றேன்" என்று கூறிய ஜடாயு "நீங்கள் மூவரும் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று வினவினார்.

வந்திருப்பவர்கள் தசரத புத்திரராகிய ஸ்ரீராமன், அவருடைய மனைவி சீதை மற்றும் தம்பி லட்சுமணன் என்பதை அறிந்து கொண்ட ஜடாயு... "நானும், உங்கள் தகப்பனார் தசரத சக்கரவர்த்தியும் ஒரு காலத்தில் சிறந்த நண்பர்களாக விளங்கினோம். இப்பொழுது அவர் எப்படி இருக்கிறார்?" என்று கேட்டார்.

"எங்களை வனவாசம் அனுப்பிய பிறகு எங்கள் தகப்பனார் மனம் வருந்தி மேலுலகம் சென்று விட்டார்" என்று ஸ்ரீராமர் சொன்னதைக் கேட்டு ஜடாயு மிகவும் மனக்கிலேசமடைந்தார்.

பின்னர் ஒருவாறு தமது மனதைத் தேற்றிக் கொண்டு, கவலைப்படாதே ஸ்ரீராமனே! நீயும், உன் தம்பியும் அடர்ந்த வனத்துக்குள் வேட்டையாடச் செல்லுகையில் உன் மனைவி சீதாதேவிக்குக் காவலாக நான் இருப்பேன்" என்று ஆறுதல் கூறினார்.

ஜடாயுவின் வடிவத்தில் தங்கள் தந்தையார் தசரதச் சக்கரவர்த்தியையே நேரில் கண்டது போன்று உணர்ந்த ஸ்ரீராமர் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்தக் கழுகை ஆலிங்கனம் செய்து மகிழ்ந்தார்.

சீதாப் பிராட்டியைக் கவர்ந்துச் சென்ற இலங்கேஸ்வரனைத் தனியொரு ஆளாக எதிர்த்து தீரத்துடன் போர் செய்த ஜடாயு தமது வயோதிகத்தின் காரணமாகத் தாக்குப்பிடிக்க முடியாமல் சிறகுகள் வெட்டப்பட்டு பூமியில் விழுந்தார்.



பின்னர், சீதாதேவியைத் தேடியபடி காடெங்கிலும் திரிந்த ஸ்ரீராமரும் லட்சுமணரும் குற்றுயிரும் குலையுயிருமாக விழுந்து கிடந்த ஜடாயுவைக் கண்டு மனம் வருந்தினர்.

சீதா தேவியை இலங்கேஸ்வரன் அபகரித்துக் கொண்டு சென்றதையும், அவனுடன் தாம் போரிட்டு வீழ்ந்ததையும் தெரிவித்து ஜடாயு உயிர் துறந்தார்.

வனவாசம் செய்ய நேர்ந்ததால் தங்களுடைய தந்தையாராகிய தசரதச் சக்கரவர்த்திக்குச் சரம கைங்கர்யங்களைச் செய்ய இயலாமல் வருந்திய ஸ்ரீராமபிரானும், லட்சுமணனும் அவருடைய நண்பராகிய ஜடாயுவையே தந்தைக்கு நிகராக மதித்து அவருக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்து அவரை நற்கதிக்கு அனுப்பி வைத்தனர்.


கழுகு இனத்தைச் சேர்ந்த பறவையாகிய ஜடாயுவைத் தம்முடைய தந்தைக்கு நிகராகக் கருதி இறுதிச் சடங்குகளைச் செய்ததன் மூலம் அனைத்து ஜீவராசிகளையும் ஏற்றத்தாழ்வு பாராமல் சமநோக்குடன் பார்க்கின்ற தம்முடைய உன்னதமான குணத்தை ஸ்ரீராமர் வெளிப்படுத்தி அருளினார். "திருக்கோளூர் பெண்பிள்ளை ரகசியம்" என்ற நூலில் உள்ள "அரக்கனுடன் பொருதேனோ பெருவுடையாரைப் போலே?" என்ற வாக்கியம் ஜடாயுவின் வீரத்தையும், தியாகத்தையும் புகழ்ந்துரைக்கின்றது. இதன் மூலம், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஜடாயுவைப் "பெரிய உடையார்" என்று போற்றி வணங்குவதை நாம் அறிந்து கொள்கின்றோம்.

"பெரிய உடையார்" என்று சிலாகிக்கப்படும் ஜடாயுவின் தியாகம், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் பெருந்தன்மை, திவ்யதம்பதிகளின் மனம் ஒத்த தாம்பத்யம் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஜடாயுவின் சரித்திரம் ஸ்ரீமத்ராமாயணத் திற்கே பெருமை சேர்ப்பது உண்மையிலும் உண்மையாகும்.

*தொடர்ந்து அலசுவோம்...*

### திருமலை மலைப்பாதையில்..

- வாழ்க்கை விலைமதிக்க முடியாதது. எனவே சாலை விதிமுறைகளைக் கடைபிடியுங்கள்.
- வாகனத்தை கவனமுடன் நடத்துங்கள். சேர வேண்டிய இடத்தை எளிதில் அடையுங்கள்.
- மலைப்பாதையில் திருப்பதியில் இருந்து திருமலைக்குப் பயண நேரம் 28 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் திருமலையில் இருந்து திருப்பதிக்குப் பயண நேரம் 40 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் உங்களுக்கு முன்பாகச் செல்லும் வாகனத்தை முந்தாதீர்கள்.
- மலைப்பாதையில் வாகனத்தின் இன்ஜினை நிறுத்தி நியுட்ரலில் செல்லாதீர்கள்.
- மலைப்பாதையில் கைபேசியில் உரையாடிக் கொண்டே வாகனத்தை ஓட்டாதீர்கள்.





ஆயுர் வேதம்

# ஆரோக்கிய (ஆன்மீக) வாழ்விற்கு சைவ உணவுகள்





**தெலுங்கு மூலம்:**
**டாக்டர். சி.மதுசூதன சர்மா,**
**90007 61390.**

**தமிழாக்கம்:**
**திருமதி வி.உஷா, திருப்பதி.**

உயிர்கள் அனைத்திற்கும் உணவு மிக அவசியம். இந்த உணவு வகைகள் இரண்டு. அவை சைவம், அசைவம்.

பரிசோதனைகளின்படி மனிதர்களின் உடல் சைவ உணவை சார்ந்து வாழும் தன்மையுடையது. எடுத்துக்காட்டாக நம் உணவில் மாவுச்சத்து செரிமானம் அடைந்த பின் அமைலேஜ் என்ற எம்ஜைம் வாயில் ஊறும் நீரில் இருக்கும். மாமிச உணவில் மாவுச்சத்து இருக்காது. சைவ உணவை உண்பவர்களின் வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட்டுடன் ஒப்பிட்டால் மாமிச உணவை உண்பவர்களின் வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட் அடர்ந்த தன்மை கொண்டது.

அறிவியல் முறைப்படி ஆராய்ந்து பார்த்தால் நம் உடல் நலத்திற்கும், நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கவும் இந்த சைவ உணவு தான் மிகுந்த பலனை அளிக்கிறது என்று சொல்லப்படுகிறது.

நார்ச்சத்து சைவ உணவுகளில் அதிகம். மேலும் சைவ உணவுப் பொருட்களில் வைட்டமின், கனிமச்சத்து ஆகியவை அதிகம் இருக்கின்றன. இவற்றால் மலச்சிக்கல்கள் நீங்கும். கோலன் புற்றுநோய் வராமல் பாதுகாப்பை அளிக்கிறது.

தென் அமெரிக்காவில் சில பகுதிகளில் உள்ள மக்கள் அதிக அளவில் மாமிச உணவுகளை உட்கொள்வதால் அவர்களுக்கு கோலன் புற்றுநோய் வந்துள்ளதாக பதிவிடப்பட்டுள்ளது.

மாமிச உணவுகளில் நார்ச்சத்து இல்லாததால் மேலும் பல வித நோய்கள் வருகின்றன என்றும் சொல்லப்படுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நம் சித்தர்கள் "ரோகா சர்வேபி மந்தாக்னௌ" என்று கூறியுள்ளார்கள்.

இதயக் கோளாறுகளுக்கு பகைவனாகக் கருதப்படும் கொழுப்புச்சத்து பற்றி மக்களுக்கு சரியான விழிப்புணர்வு இல்லை. சில சைவ உணவுகளில் கொழுப்புச்சத்து அதிக அளவில் உள்ளதாகவும், அதனால் இதயக் கோளாறுகள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றனர்.

இரத்தக் குழாய் சம்பந்தப்பட்ட நோய்கள் வரக் கூடிய வாய்ப்புகளும் உண்டு என்றும் சொல்கின்றனர். தாவர உணவுகளில் எவ்வித கொழுப்பு சத்தும் இல்லை. "யதர் அன்னம் ததா மன:" என்று கூறுகிறது இந்திய பழமை இலக்கியங்கள். நாம் உண்ணும் உணவின் தன்மை பொருத்து நம் மனம் இணைந்து இருக்கும் என்று சொல்வர்.

சைவ உணவுப் பழக்கவழக்கங்கள் சத்துவம் என்ற குணத்திற்கு அடிப்படையான உணவு. இவற்றை உட்கொள்வதால் நம் மனம் சந்தோஷமாக இருக்கும். கோபம் போன்ற தீயகுணங்கள் வராமல் தடுக்கும். ஆலோசனை திறன், நல்ல ஞானம், பகுத்தறிவு திறன், நினைவாற்றல், மன நிம்மதி கிட்டும் என வல்லுனர்கள் கூறுகின்றனர். இவற்றை அறிந்து சைவ உணவிற்கு முன்னுரிமை கொடுப்போம்! ஆரோக்கியமான வாழ்வு வாழ்வோம்!!



# பிப்ரவரி 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில்துறையில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புதுத்தொழில் தொடங்கச் செய்யும் முயற்சிகள் வெற்றி தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். பெண்களுக்கு இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண் பெறுவர். இளைய சகோதரனுக்கு சிறு உடல் உபாதை ஏற்பட்டுப் பிறகு சரியாகும். மொத்தத்தில் நல்ல யோகமான மாதமிது.

**ரிஷபம்**

ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் தீரும். மனைவி மற்றும் சகோதரர் வகையில் தன வரவு உண்டு. குடும்பத்தில் மற்றவர்களுடன் பேசும் போது விவாதத்தைத் தவிர்க்கவும். மாதத்தின் பிற்பகுதியில் தொழில் வளர்ச்சியில் எதிர்பார்த்த தன வரவு உண்டு. வேலைக்கேற்ற ஊதியம் உண்டு. தல யாத்திரையினால் நன்மை உண்டு. பிரச்சனைகள் தீர்ந்து நன்மை தரும் மாதமிது.

**மிதுனம்**

ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. அடிக்கடி பயணம் செய்ய வேண்டி இருக்கும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண் பெறுவர். அலைச்சலின் பேரில் தொழிலில் விருத்தி உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. தந்தைக்கு உடல் வலி உண்டாகும். உணவு விஷயத்தில் மிகுந்த அக்கறை தேவை. மிகவும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய மாதமிது.

**கடகம்**

தொழில் துறையில் அலைச்சல் காரணமாக உடல் வலி உண்டாகும். மனைவியின் ஆலோசனை உங்களுக்கு பேருதவியாக இருக்கும். குழந்தைகளின் கல்விக்காக செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் பெரும் முயற்சியின் பேரில் சுப காரியங்கள் நடக்கும். வீடு, மனை வாங்க முயற்சி செய்யலாம். பிரச்சனைகள் குறைந்து நன்மைகள் பெறும் மாதமிது.

**சிம்மம்**

தொழிலில் நல்ல மாற்றங்கள் நிகழும். திடீர் தன வரவு உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். திருஷ்டி காரணமாக உடல் வலிகள் உண்டாகும். நேர்முகத் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெறுவர். பெற்றோரின் ஆரோக்கிய குறைபாடுகள் நீங்கும். மனைவிக்கு உடல் வலிகள் உண்டாகும். பெண்களுக்கு நல்ல யோகம் உண்டு. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் மாதமிது.

**கன்னி**

தெய்வ பலமும், ஞானமும் பெறும் மாதமிது. தொழில் துறையில் கடும் முயற்சியின் மூலம் முன்னேறும் மாதமிது. தொழில்துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தெய்வ அருளால் குழந்தை பாக்கியம் கிட்டிடும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். நல்ல யோகமான தெய்வ அருள் பெறக்கூடிய மாதமிது.

**துலாம்**

கடன் வாங்கி சுபச் செலவுகள் செய்வீர். மனைவியால் தன லாபம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் பற்றி இம்மாதம் பேச வேண்டாம். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது பல முறை யோசித்து முடிவெடுக்கவும். பிறருக்கு ஜாமீன் போட வேண்டாம். குழந்தைகள் தேவையின்றி அடம் பிடிப்பர். மிகவும் கவனமுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். சகோதரர்களால் நன்மையுண்டு. நண்பர்கள் உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பின்னர் சரியாகும். தொழில் வளர்ச்சிக்காக அடிக்கடி பயணம் செய்வீர். தாய்க்கு உடல் வலிகள் உண்டாகலாம். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**தனுசு**

தொழில் துறையில் மிகப் போட்டியும், அலைச்சலும் அதிகமாகும். கணவன் மனைவியிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். இளைய சகோதரரின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. மாணவர்கள் நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவார்கள். புத்திசாலித்தனமாகப் பேசி காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். கடும் முயற்சியினால் வெற்றி பெறும் மாதமிது.

**மகரம்**

புத்திசாலித்தனமாக யோசித்து செயலாற்றி வெற்றி பெறுவீர். ஆரோக்கியக் குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். தொழில் துறையில் பழைய பாக்கிகள் வசூலாகும். பெண்களுக்கு நல்ல யோகமான மாதமிது. தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிடைக்கும் மாதமிது.

**கும்பம்**

காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர். செலவினங்கள் அதிகமானாலும் அதற்குரிய வருமானம் கிட்டும். பதவி உயர்வு, பெண்களால் தனலாபம் உண்டு. வேலைப்பளு குறையும். ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்வர். பிரயாணத்தில் இருந்த தடை விலகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல ஆரோக்கியமான மாதமிது.

**மீனம்**

செலவிற்கேற்ற வருமானம் கிட்டும். எதிர்பாராத தன லாபம் உண்டு. மனைவியால் தனலாபம் உண்டு. தொழில் அலைச்சலால் தூக்கம் வராது. நண்பர்கள், உறவினர்கள் பிரச்சனைகளை கொடுப்பர். குழந்தைகளால் ஏற்றம் உண்டு. சகோதரர்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் கடுமையாக உழைத்து, மதிப்பெண்கள் பெறுவர். மிகுந்த அலைச்சலுடன் முன்னேறும் மாதமிது.




நீதிக்கதை

# கடவுளாக இருங்கள்!

பனி சூழ்ந்த மலைப்பிரதேசத்தில் காவல் புரியும் பணியில் இராணுவ வீரர்கள் இருந்தனர். நாட்டின் எல்லையில் ஆங்காங்கே இருக்கும் தடுப்புக் கூண்டுகளில் இருந்தபடி, இரவும் பகலும் காவல் புரிய வேண்டும். அங்கிருந்து சற்று தூரத்தில் ஒரு நெடுஞ்சாலை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையை ஒட்டி ஒரு டீக்கடை இருக்கும். டீ குடித்து உடலைச் சூடேற்றிக் கொள்ள அங்குதான் வர வேண்டும். குளிர்காலத்தில் பனி கொட்டி அந்த நெடுஞ்சாலை மூன்று மாதங்கள் அடைப்பட்டு விடும். அப்போது வீரர்களுக்கு எதுவுமே கிடைக்காது.

குளிர்காலத்துக்கு முன்னதாக ராணுவ வீரர் குழு ஒன்று எல்லைக்குக் கிளம்பியது. வழியில் டீ குடித்து விட்டு உற்சாகமாக மலையேறலாம் என நினைத்தார்கள். ஆனால் டீக்கடை பூட்டியிருந்தது. “என்ன செய்வது” என்று எல்லோரும் திகைத்தார்கள். வீரர்கள் ஏமாற்றம் அடைந்தால் நன்றாக இருக்காது என நினைத்த தளபதி, “கடையின் பூட்டை யாராவது திறக்க முடிந்தால், நாமே டீ போட்டுக் கொள்ளலாம்” என்றார். கிட்டத்தட்ட திருட்டுதான். ஆனால் வேறு வழி இல்லை.

ஒரு வீரர் சாமர்த்தியமாகப் பூட்டைத் திறந்தார். எல்லோரும் பிஸ்கெட் எடுத்துக் கொண்டார்கள். கடையில் ஃபிரஷ்ஷாகப் பால் இருந்தது. சூடாக டீ போட்டுக் குடித்தார்கள். எல்லாம் முடிந்து கிளம்பும் நேரத்தில் தளபதி கடையின் கல்லாப் பெட்டியில் ரூ.2,000/– வைத்தார்.

குளிர்காலம் முடிந்து அவர்கள் முகாமிற்குத் திரும்பும் நேரத்தில் அதே சாலை வழியாக வந்தார்கள். அப்போது டீக்கடை திறந்திருந்தது. அவர்கள் டீ குடிக்க நின்றார்கள். கடைக்காரர் எல்லோரையும் வரவேற்று, பிஸ்கெட், டீ கொடுத்தார். எல்லோரும் குடித்து முடித்து கிளம்பும்போது தளபதி பணம் கொடுத்தார்.

“கடவுளுக்கு நன்றி” என்று சொன்னபடி பணத்தை வாங்கினார் கடைக்காரர். ஒரு வீரன், “கடவுளா பணம் கொடுத்தார்? எங்கள் தளபதிதானே கொடுத்தார்” எனக் கிண்டலாகக் கேட்டான்.

கடைக்காரர் அவனைக் கனிவுடன் பார்த்தார். “அப்படி சொல்லாதீர்கள். கடவுள்தான் எனக்குக் கொடுக்கிறார். மூன்று மாதங்களுக்கு முன்பு என் மகனை சிலர் தாக்கி விட்டனர். அவனை மருத்துவமனைக்கு அழைத்துப் போயிருந்தபோது என் கடையைத் திறந்து யாரோ பொருட்களைத் திருடியிருந்தார்கள். ஆனால், கடவுள் என் நிலையை உணர்ந்து என் கல்லாப் பெட்டியில் 2,000/– ரூபாய் வைத்திருந்தார். என் மகனின் சிகிச்சை செலவுக்கு அது தான் உதவியது” என்றார்.

“கடவுளா கல்லா பெட்டியில் பணம் வைத்தார்?” என்று ஒரு வீரன் கேட்க, எல்லோரையும் கண்களால் அமைதியாக்கினார் தளபதி. கடையிலிருந்து வெளியில் வந்து வாகனத்தில் அமர்ந்த பிறகு தளபதி சொன்னார். “நாம் செய்தது சட்டத்தின் பார்வையில் திருட்டு என்பதாக இருக்கலாம். உலகத்துக்கு அது தவறாகத் தெரியலாம். ஆனால், நாம் பணம் வைத்து சென்றிருந்தாலும் அதைக் கடவுள் செயலாக அந்த டீக்கடைக்காரர் நம்புகிறார். அந்த நம்பிக்கையைத் தகர்க்க வேண்டாம். எல்லாச் செயல்கள் மூலமாக பிறருக்கு கடவுளை உணர்த்துங்கள். அது தான் வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றும்!” என்றார் தளபதி.

–இரா. அருண்குமார், புதுச்சேரி, 99448 02769

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

## சித்திரப் பகுதி









கீழே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்

அ) இரத சப்தமிக்கு தொடர்புடையவை


ஆ) சிவபெருமானுடன் தொடர்புடையவை

இ) சரஸ்வதி தேவி தொடர்புடையவை



விடைகள் : அ = 2,5,7,8; ஆ =1,4,9,11; இ = 3,6,10,12

இங்கு இருக்கும் அபிஷேகப் பொருட்களில் எந்த பொருள் சிவபெருமானை சென்றடையும் என்பதை அறிந்து தகுந்த பாதையை தேர்ந்தெடுங்கள்!




விடை : (1)

## வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

நணுகேல் நைவினை, உரையேல்
நொய்ய, இடங் நோய்க்கு கொடேல், பகரேல்
பழிப்பன, பழகேல் பாம்பொடு, சொல்லேல்
படச் பிழைப், பெற பீடு நில், புகழ்ந்தாரைப்
வாழ் போற்றி.

நைவினை நணுகேல், நொய்ய
உரையேல், நோய்க்கு இடங்கொடேல்,
பழிப்பன பகரேல், பாம்பொடு பழகேல்,
பிழைப் படச் சொல்லேல், பீடு பெற நில்,
புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-31

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. ஸ்ரீகிருஷ்ணரின் திருக்கரத்தில் இருக்கும் சங்கு...........................................................................................
2. வேதநூல் பிராயம் நூறு எனப் பாசுரமிட்டவர் ............................................................................................
3. வைணவர்களால் “பெரிய உடையார்” எனப் போற்றப்படுபவர்...........................................................................
4. திருமலையில் ஒருநாள் பிரம்மோத்சவம் எனச் சிறப்பு பெற்ற நாள் ..............................................................
5. ஜடாயுவைத் தன் தந்தையாக நினைத்து அவருக்கு இறுதிச் சடங்கு செய்தவர் ...............................................
6. பதின்மர்கலை உட்பொருளை பரிந்து கற்றவர் ..............................................................................................
7. பன்னிரு சிவாலய ஓட்டம் நடைபெறும் மாவட்டத்தின் பெயர்............................................................................
8. அனைத்து உலகங்களையும் பிரகாசிக்கச் செய்பவர் ........................................................................................
9. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் ......................................................................................................
10. விரும்பும் நேரத்தில் மரணம் ஏற்பட வேண்டுமென வரம் பெற்றவர் ...............................................................
11. இராமாநுஜர் சரணமாகப் பற்றிய ஆளவந்தாரின் சீடர் .................................................................................
12. திருஎவ்வுளூர் திவ்யதேச விமானத்தின் பெயர் ...........................................................................................
13. சிவாலய ஓட்டத்தின் போது உச்சரிக்கப்படும் திருநாமங்கள்...........................................................................
14. இராமாநுஜர் அவதரித்த மாதம், நட்சத்திரம் ...................................................................................................
15. ருத்ரவடிவங்களில் நான் சங்கரன் என்று கூறியவர்...........................................................................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.02.2025.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

## சக்கரத்தைச் சுற்றுங்கள்!

- கல்வியை அருளும் அன்னை
- மாக மாத பஞ்சமியின் பெயர்
- சரஸ்வதி தேவியின் மணாளன்
- கலைகளுக்கு அரசி
- வெண் தாமரையில் அருளும் தேவி
- நவராத்திரியில் புத்தங்களை வைத்து யாருக்கு பூஜை செய்வர்
- சரஸ்வதி தேவியின் வாகனம்
- சரஸ்வதி அந்தாதியை அருளியவர்



அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

### விடைகள்

1) ஸ்ரீசரஸ்வதி தேவி, 2)வஸந்த பஞ்சமி, 3) பிரம்ம தேவர், 4) கலையரசி/கலைவாணி,
5) ஸ்ரீசரஸ்வதி தேவி, 6) ஸ்ரீசரஸ்வதி தேவி, 7) அன்னப் பறவை, 8) கம்பர்.

## கணித விளையாட்டு





இங்கு பூட்டுகளில் உள்ள கணித விடைக்குப் பொருத்தமான சாவியைப் பொருத்துக

### விடைகள்

1) v, 2) i, 3) ii, 4) iii, 5) iv

*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள். கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியை பின்பற்றுங்கள்!*




நீதியை அறிவோம்!


நீதி : நிதானம் அலட்சியத்தை வெல்லும்.
( சித்திரத்தின் வரிசை : 3,1,4,2)

சித்திரக் கதை

# பக்தியால் எதுவும் சாத்தியமே


கதை மூலம் :டாக்டர் கே..ரவிச்சந்திரன்
சித்திரம் :திரு. து. சிவாஜி





சிவபெருமானின் அருளால் புனிதவதிக்கு கிடைத்த மாம்பழத்தினைக் கண்ட அவள் கணவன் திகைத்து நின்றான்
தெய்வீகச் சக்தி கொண்ட புனிதவதியுடன் இல்லறம் நடத்துவது தவறு என்று எண்ணினான். அவளை நீங்கி பாண்டிய நாட்டிற்குச் சென்றான்
மருமகன் வேறொரு நாட்டில் வாழ்வதை அறிந்த புனிதவதியின் பெற்றோர் அவளை அழைத்துக் கொண்டு பாண்டிய நாட்டிற்குச் சென்றனர்
ஆனால், புனிதவதியின் கணவன் அங்கு வேறொரு பெண்ணை மணந்திருந்தான். தன் மகளுக்கு புனிதவதி என்று பெயர் சூட்டியிருந்தான்.
இதனால் புனிதவதி... “பரமேஸ்வரா! கணவருக்காகத் தாங்கியிருந்த இந்த உடல் நீங்கி உன்னையே போற்றிட பேய் வடிவினை வழங்கிடு” என்று வேண்டினாள். இறைவனும் அங்ஙனமே அருள் புரிந்தார்.
பேய் வடிவம் பெற்று சிவயோகியானாள்
இறைவா! உன்னைக் காண கைலாயம் வருகின்றேன். தரிசனமளித்திடு.
பார்வதி! நம்மைக்கான “அம்மை” வருகின்றார் பார்.
அம்மையே வருக! வேண்டுவனக் கேள்
என்றும் உம்மை மறவாமை வேண்டும்படி அருள்புரிந்திடுக.
கைலாயத்திலிருந்து திரும்பி வந்த காரைக்கால் அம்மையார் திருஆலங்காட்டில் தினமும் இறைவனின் திருத்தாண்டவத்தைத் தரிசித்து, அவன் புகழ்பாடி அருள் பெற்றார். தலைகீழான நிலையில் கைலாயம் சென்று, சிவ பெருமானால் “அம்மை” என்று அழைக்கப் பெற்ற மகாபக்தையின் கதையை இச்சிவராத்திரி நாளில் நினைத்தாலும் நம் கோரிக்கைகள் நிறைவேறும் .

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _______________

(பெரிய எழுத்துக்களில்) _______________

_______________

_______________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர் களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண் டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும்*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸ்ரீநிவாஸமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### 18-02-2025 முதல் 26-02-2025 வரை



| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 18-02-2025 | செவ்வாய் | திருச்சி உத்ஸவம்,<br>துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 19-02-2025 | புதன் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 20-02-2025 | வியாழன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 21-02-2025 | வெள்ளி | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 22-02-2025 | சனி | மோகினி அவதாரம் | கருட வாகனம் |
| 23-02-2025 | ஞாயிறு | ஹனுமத் வாகனம்,<br>மாலை:வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 24-02-2025 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 25-02-2025 | செவ்வாய் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 26-02-2025 | புதன் | பல்லக்கு உற்சவம்,<br>திருச்சி உற்சவம்<br>அவப்ருதோத்ஸவம்,<br>சக்கரஸ்நானம் | திருச்சி உற்சவம்<br>துவஜாவரோஹணம் |

## திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### 19-02-2025 முதல் 28-02-2025 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 19-02-2025 | புதன் | துவஜாரோஹணம் | ஹம்ஸ வாகனம் |
| 20-02-2025 | வியாழன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 21-02-2025 | வெள்ளி | பூத வாகனம் | சிம்ம வாகனம் |
| 22-02-2025 | சனி | மகர வாகனம் | சேஷ வாகனம் |
| 23-02-2025 | ஞாயிறு | திருச்சி உத்ஸவம் | அதிகார நந்தி வாகனம் |
| 24-02-2025 | திங்கள் | வ்யாக்ர வாகனம் | யானை வாகனம் |
| 25-02-2025 | செவ்வாய் | கல்ப விருக்ஷ வாகனம் | குதிரை வாகனம் |
| 26-02-2025 | புதன் | திருத்தேர் | நந்தி வாகனம்<br>(மகாசிவராத்திரி) |
| 27-02-2025 | வியாழன் | புருஷாமிருக வாகனம் | (திருக்கல்யாணம்)<br>திருச்சி உற்சவம் |
| 28-02-2025 | வெள்ளி | சூரியப்பிரபை வாகனத்தில்<br>நடராஜ ஸ்வாமி<br>திரிசூல ஸ்நானம் | துவஜாவரோஹணம்<br>இராவணாசுர வாகனம் |



SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 25-01-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

